Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி-20 | 02-06-2004 | புதன்கிழமை | ஓசை -105






# ஊடகவியலாளர் நடேசனின் மறைவு குறித்து எமது தலைமை வேதனை அடைந்துள்ளது

## அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

மிக மூத்த பத்திரிகையாளரும், தமிழ்த் தேசியத்திற்கு உயிர்கொடுத்து, தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி உறுதியாகவும், துணிச்சலோடும் குரல் கொடுத்த சிறந்த பத்திரிகையாளனை இன்று எங்களுடைய தேசம் இழந்து நிற்கின்றது.

இதனால் எங்களது தலைமைப்பீடம் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்திருக்கின்றது.

இவ்வாறு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் ஊடகவியலாளர் ஜி.நடேசன் கொல்லப்பட்டிருக்கின்றார். இலங்கையிலே தமிழ்த்தேசியத்திற்காக உழைக்கின்ற அல்லது குரல் கொடுக்கின்ற ஊடகவியலாளர்கள் மட்டுமே தாக்கப்படுகிறார்கள்; கொல்லப்படுகிறார்கள். அவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருப்பதாக பல்வேறு ஊடகங்களும், தமிழ் ஊடகவியலாளர்களும் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இதுபற்றி தங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்களா? என்று ஊடகவியலாளர்கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், அவர் மேலும் தெரிவிக்கையில்.

உண்மையிலேயே ஊடகவியலாளர்களுடைய இந்த எதிர்பார்ப்பை நாங்கள் விளங்கிக்கொள்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையும் மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்திருக்கிறது.

உண்மையில் அடாவடித்தனமான, மிகமோசமான இந்தச்செயல் மிகவும் கண்டிக்கப்படவேண்டியது. ஊடகவியலாளர் நடேசன் கொல்லப்பட்ட தென்பது திட்டமிட்ட ரீதியில் இலங்கை அரசாங்கத்தினுடையதும், படைத்தரப்பின் ஆதரவுடன் தான் நடைபெற்றிருக்கின்றது. அதாவது தமிழ்த்தேசியத்தின் உயர்ச்சி வளர்ச்சி எழுச்சியை நசுக்கும் நோக் கோடு, இன்று உறுதியடைந்திருக்கின்ற தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்துகின்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஊடகவியலாளர் நடேசன் கொலையைக் கண்டித்து

# வடக்கில் இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிப்பு



நாட்டுப்பற்றாளர் நடேசன் அவர்களின் வித்துடல் நேற்றிரவு கிளிநொச்சியில் வைக்கப்பட்டிருந்தபோது..

## வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும்

(கொழும்பு)

**நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் அவர்களின் படுகொலையைக் கண்டித்து இன்று வடபகுதி எங்கும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனையொட்டி வர்த்தக நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும்.**

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலையைக் கண்டித்து இன்றைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு ஊடகவியலாளர் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. நாட்டுப்பற்றாளர் நடேசனின் வித்துடல் இன்று யாழ்.குடாநாட்டிற்கு எடுத்துவரப்படவுள்ள நிலையில் இன்றையதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் கல்வி நிலையங்கள் பொதுச்சந்தைகள்,மற்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் நடேசனுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

(செட்டிகுளம்)

மூத்த பத்திரிகையாளர் நடேசனின் வித்துடல் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்று மக்களின் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

முன்னதாக வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராம மான மூன்றுமுறிப்பு பகுதியில் வைத்து நடேசனின் வித்துடலை மாலை 4.25 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் பலதடவைகள் சுட்டிக்காட்டியும் கண்காணிப்புக்குழு நடவடிக்கையில் மாற்றமில்லை

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் தொடர்பாக பல முறை சுட்டிக்காட்டியும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு இது வரை எந்தவித, நடவடிக்கைகளும் எடுக்காததையிட்டு விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொடூரக் கொலைகளை வன்மையாகக் கண்டித்து மட்டு அம்பாறை அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் சமீபகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற படுகொலைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி நகரில் இன்று நடேசனுக்கு அஞ்சலி நிகழ்வு



நாட்டுப்பற்றாளரும், மூத்த பத்திரிகையாளருமான அமரர் ஜி.நடேசன் அவர்களின் அஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இவ்வஞ்சலி நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர், அரச அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், போராளிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

# மட்டு.மண்டூர்ப் பகுதியில் புலிகளின் அரசியல் துறைச்செயலகம் மீது குண்டுவீச்சு

மட்டக்களப்பு மாவடி முன்மாரிக்கோட்டத்திலுள்ள மண்டூர் அரசியல்துறைப் பணிமனை மீது நேற்று அதிகாலை 2.25 மணியளவில் கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இத்தாக்குதலின் போது அலுவலகத்தினுள் எவரும் இருக்கவில்லை. இத்தாக்குதலினால் வீட்டின் கூரையும், அறையின் சில பகுதிகளும் சேதமுற்றுள்ளன.

# சமாதான முயற்சியில் அரசின் தாமதத்தை உலகின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளோம்

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

புதிய அரசாங்கம் பதவி ஏற்று இருக்கின்றது. புதிய அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வத்தைக்காட்டுவதை தவிர்த்து வருகின்றது. முக்கியமாக சர்வதேச சமூகத்தினது நன் கொடையாளர்களது உதவிகளை பெறுவதில் கரிசனை காட்டுகின்ற அதேவேளை சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச் செல்வதற்கான நிலைப்பாடுகளை எடுப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்தி வருகின்றது; என்கின்ற குற்றச்சாட்டினை நாங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு, கொண்டுவந்திருக்கின்றோம்.இவ்வாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் உலக வங்கியின் இலங்கை வதிவிடப்பிரதிநிதியுடனான சந்திப்புக் குறித்துச் செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

எங்களுடைய மக்களுடைய ஆணையும், எங்கள் மக்களுடைய விருப்பமும் இடைக்கால நிர்வாக

(12ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின்,
அனுசரணையுடன் இயங்கும் வெற்றிமனையின்
பயனாளியாகிய

**திருமதி. இராஜசுலோசனா செல்வராசா**
**(8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)**



பிறப்பு 1967.09.16

இறப்பு 2004.05.31

மூன்று மாதங்கள் மட்டும்
முகம் காட்டி மறைந்திட்ட
அன்புத்தாயே.
தாளவில்லையம்மா உம் பிரிவு ~ உன்
கூட்டுக்குள் உறவாட குஞ்சுகளும் ~ உனை
குணமாக்கி வளமாக்க நாமும் முயல்கையில்
ஏனம்மா எமைவிட்டு தனிவழி சென்றாய்?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயரும் குடும்பத்தவரது துன்பத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.


இயக்குனர்,பணியாளர்,பயனாளிகள்,
வெற்றிமனை

(4397)

# அழகியல் கலாமன்றம் ~ கிளிநொச்சி

**இளையோருக்கான புதிய நுண்கலை வகுப்புகள்**
**19.06.2004 தொடக்கம் ஆரம்பம்**





- வாய்ப்பாட்டு
- பரதம்
- கதகளி
- மிருதங்கம்
- வயலின்
- நாடகம்
- நடனம்
- பண்ணிசை
- வீணை
- சித்திரம்
- ஓகன்

வாரத்தில் இருநாட்கள் – வடஇலங்கை சங்கீத சபையின் தரம் 01, தரம் 02 பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும்.

**உடன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.**

அதிபர்

(4564)

# சாவு அறிவித்தல்

## திருமதி.ஐயாத்துரை பார்வதி

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல:24 ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஐயாத்துரை பார்வதி 31.05.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா நாயகம் அவர்களின் புதல்வியும, காலஞ் சென்றவர்களான சிற்றம்பலம் வள்ளியம்மையின் மருமகளும், காலஞ் சென்றவர்களான லட்சுமி, செல்லம்மா மற்றும் விசாலாட்சி, சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் பாலாம்பிகை, தில்லைவனம், நேசமணி, தருமபூபதி, புஸ்பமலர், மாங்களநாயகி, காலஞ் சென்ற கிருபாநிதி, மற்றும் சாந்தநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவரெட்ணம, தம்பிராசா, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சின்னராசா ஜெகதீசமூர்த்தி, தெய்வேந்திரம், சிவபாலன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.05.2004 அன்று காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஸ்கந்தபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-

மக்கள்
இல. 24
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(4566)

# அதிரஷ்டலாபச் சீட்டு குலுக்கல் தொடர்பானது

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டத்திற்காக 31.05.2004 இல் வற்றாப்பளை கணண்கை அம்மன் ஆலயத்தில் நடாத்தப்பட்ட அதிரஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்.

01. 1ஆம் பரிசு இல :- 34253 (25000 ரூபா ரொக்கப்பணம்).
02. 2ஆம் பரிசு இல :- 11321 (15000 ரூபா ரொக்கப்பணம்).
03. 3ஆம் பரிசு இல :- 05211 (10000 ரூபா ரொக்கப்பணம்).

※ 10 ஆறுதல் பரிசுகள் (ஒவ்வொன்றும் 1000 ரூபா ரொக்கப்பணம்)

**பரிசு இலக்கங்கள் :-**

| | |
|---|---|
| 01. 08413 | 06. 29831 |
| 02. 01305 | 07. 15949 |
| 03. 18393 | 08. 34783 |
| 04. 01547 | 09. 15762 |
| 05. 03182 | 10. 01137 |

**முக்கிய குறிப்பு :-**

பரிசுக்குரியவர்கள் 31.07.2004 இற்கு முன்பாக பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும். இத் திகதிக்குப் பின்னர் பரிசுகள் வழங்கப் படமாட்டாது. ஒத்துழைப்பு வழங்கிய எல்லோருக்கும் நன்றியினை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி.

சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-9814)


# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பிதழ்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் வைகாசித் திங்கள் 21ஆம் நாள் (03. 06. 2004) வியாழக்கிழமை சித்தயோகமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபவேளையாகிய காலை 09.51 மணி தொடக்கம் 10.27 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்.

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**சும்மா இன்சுவையகம் (குளிரகம்)**

தரமானதும் சுவையானதுமான உணவுவகைகளுக்கு

யாழ். வீதி பரந்தனில் கோலாகலமாகத் திறந்து வைக்க இறையருள் கூடியுள்ளதால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"வாழ்க வளமுடன்"



இவ்வண்ணம்.
தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர் தை. பாலன்

(சி: 9815)

# அமெ.இராணுவத்தளத்தின் நுழைவாயிலில் தற்கொலையாளியால் கார்க்குண்டுத் தாக்குதல்

## 11 பேர் பலி, 22 பேருக்குக் காயம்

(பாக்தாத்)

**ஈராக்தலைநகர் பாக்தாத்தின் வடக்குப்பகுதியில் அமெரிக்க இராணுவத்தளம் ஒன்றின் நுழைவாயிலில் தற்கொலைக்குண்டுத்தாரி கார்க்குண்டு ஒன்றை வெடிக்க வைத்ததால் பதினொரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

நேற்று இடம்பெற்ற இத் தற்கொலைத் தாக்குதலில் இருபத் திரெண்டு பேர் காயமடைந்துள் ளனர்.

காயமடைந்தவர்களில் இரண்டு அமெரிக்க இராணுவத்தினர் உள் ளடங்கியுள்ளதாக அங்கிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக் கின்றன. ஈராக்கிய பொலிஸ் தலைமை அதிகாரி இத்தாக்குதல் பற்றித் தெரிவிக்கையில், குண்டுதாரி கறுப்புநிற பி.எம்.டபிள்யு காரை இராணுவத் தளத்தை நோக்கி செலுத்தி வாசலில் அதை வெடிக்க வைத்தார் என்று கூறினார்.

ஈராக்கின் புதிய அரசாங்கம் பற் றிய உத்தியோக பூர்வ அறிவித் தல் வெளியான நேற்று இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. அமெரிக்கா தலைமையிலான நிர் வாகத்திடமிருந்து ஈராக்கிய அரசாங்கம் இறைமையை இம் மாதம் 30 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளது.

இதேவேளை ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் கார்க்குண்டு வெடித் ததில் 04 பேர் உயிரிழந் துள்ளனர். 25பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் அமெரிக்க நிர்வாகத்தின் தலைமையகம் அருகே இடம் பெற்றுள்ளது. காயமடைந்தவர்களில் பலர் வீதி யால் சென்று கொண்டிருந் தவர்கள். இதேவேளை மற்றொரு சம்பவத்தில், இனத்தலைவர் முக் திடா அல்சதாரின் குழுவினரின் தாக்குதலில் 02 படையினர் பாக் தாத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது.

# வெள்ளைமாளிகையின் பெருமைக்குரிய பொருட்கள் பகுதியில் சதாமின் கைத்துப்பாக்கி

(வோஷிங்டன்)


ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம்ஹுசைனின் துப்பாக்கி ஒன்று அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் இருப்பதாக தெரிவிக் கப்படுகின்றது.

இத்துப்பாக்கியினை அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் சில பார்வையாளர்களிடமும் விருந்தி னர்களிடமும் காட்டி மிகவும் பெரு மைப்பட்டுக்கொண்டிருப்பதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் திக் பகுதியில் பாதாளக் குகையில் பதுங்கியிருந்த சதாமை அமெ ரிக்கா தலைமையிலான கூட்டுப் படை கைது செய்தது. அப்போது சதாமின் உடமைகளுடன் அவரது கைத் துப்பாக்கியொன்றினையும் கைப் பற்றியுள்ளது.

இத்துப்பாக்கியினை கைப் பற்றிய குழு அத்துப்பாக்கியினை புஷ் இற்கு தனிப்பட்ட அன்பளிப் பாகவே வழங்கியுள்ளது. ஆனால் இப்போது அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையின் முக்கிய பகுதியில் பெருமைக்குரிய பொருள் களில் ஒன்றாக சதாமின் துப்பாக்கி வைக்கப்பட்டுள்ளதாக ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது புஷ் இற்கு வேண்டப் பட்ட ஒருவர் அங்கு சென்ற வேளை புஷ் அவரிடம் சதாமின் கைத்துப்பாக்கியைக் காட்டி மகிழ்ந் தாராம். அப்போது புஷ்ஷின் முகத் தில் பெருமை பொங்கியதாகவும் சதாமின் துப்பாக்கியினை அவரது தனிப்பட்ட பரிசுப் பொருளாகவே புஷ் கருதுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. சதாம் பிடிபட்டபோது அத்துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டிருந்ததாகவும் தற்போது அத்துப்பாக்கியினுள் தோட்டாக்கள் இல்லாத நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.



பாகிஸ்தான் கராச்சியில் தொழுகையின் போது குண்டுவெடிப்பில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் குண்டு வெடிப்பிற்கு இலக்காகியுள்ள அரச பஸ் வண்டி.

## ஐவர் உயிரிழப்பு

(வியன்னா)

ஒஸ்ரியாவில் படகொன்று நீரில் மூழ்கியதில் ஐந்து பேர் உயிரிழந் துள்ளனர்.

ஏரியொன்றில் சென்று கொண் டிருந்த சுற்றுலாப் படகே இவ்வாறு நீரில் மூழ்கியது.

ஒஸ்ரியத் தலைநகர் வியன்னா அருகேயுள்ளது. சிற்றுட்வுப் பகுதி யில் ஐரோப்பாவிலே மிகநீளமான நதி உள்ளது. இந்த நதியிலே படகு ஒன்றில் 20 பேர் சுற்றுலா வந்து கொண்டிருந்தவேளை இந்தப் படகு திடீரென கவிழ்ந்தவுடன் பய ணித்தவர்கள் தண்ணீரில் மூழ்கத் தொடங்கினர். இத்தகவல் அறிந்து இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் நீரில் மூழ்கியவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள் நீரில் மூழ்கிய 4 பெண்கள் உட்பட 5 பேர் உயிரி ழந்தனர். எஞ்சியவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். இப்படகிலே அதிக எண்ணிக் கையிலானவர்கள் ஏறியதே இவ் விபத்துக்குக் காரணம் என்று கூறப் படுகிறது.

# பொது இடங்களில் புகைப்பிடிக்க நோர்வே அரசு தடை விதிப்பு

(ஒஸ்லோ)

பொது இடங்களில் புகைப் பிடிப்பதற்கு நோர்வே அரசு தடை விதித்துள்ளது. இந்தச் சட்டம் உடன் அமுல்படுத்தப்பட இருப்பதாக நோர்வே அரசாங்கம் அறிவித் துள்ளது. பொது மக்களிடம் மேற் கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் பொது இடங்களில் புகைப்பிடிப் பதற்கு எதிரான சட்டத்திற்கு பெரு மளவு ஆதரவு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அயர் லாந்து முதல் தடவையாக பொது இடங்களில் புகைப்பிடித்தலுக்கு எதிரான சட்டத்தை அமுல்படுத் தியிருந்தது. இந்தவகையில் உலகின் இரண்டாவது நாடாக நோர்வே இந்தச் சட்டத்தை அமுல் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக் கதாகும்.

## விலை உயர்வு

சவுதி அரேபியத் தாக்குதலை யடுத்து எண்ணெய்விலை உயர்ந் துள்ளது. இதனால் பீப்பாய் ஒன்று 40.55 டொலர்கள் எனுமளவிற்கு உயர்ந் துள்ளது. சவுதி அரேபிய தாக்குதலால் எண்ணெய் விநி யோகமும் தடைப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.



பாகிஸ்தான் கராச்சியில் கும்பல் ஒன்றினால் தீக்கிரையாக்கப்பட்டு எரியும் பஸ் வண்டியொன்றை பொலிசார் பார்த்து நிற்கின்றனர். மே 31 இல் பள்ளிவாசல் ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் 16 பொது மக்கள் கொல்லப்பட்டதற்கு எதிராகவே இந்த பஸ்வண்டி எரிப்பு இடம்பெற்றுள்ளது.

# வியட்னாமின் விவசாய அமைச்சர் ஊழல் குற்றச்சாட்டு குறித்து இராஜினாமா

வியட்னாமின் தேசிய மக்கள வையின் பிரதிநிதிகள் விவசாய அமைச்சரது இராஜினாமாக் கடி தத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆதர வாக வாக்களித்துள்ளனர்.

அவரது பதவி விலகல் குறித்த உத்தியோக பூர்வ அறி விப்பு நேற்று வெளியிடப்பட் டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங் கள் கூறியுள்ளன. இதுபற்றி தெரியவருவதாவது விவசாய அமைச்சருக்குக்கீழ் வேலை செய்யும் துணை அமைச்சர்கள் இருவர் ஊழல் விவகாரங்களில் சம்பந்தப்பட்டுள்ளார்கள். சுமார் 74 இலட்சம் டொலர்கள் ஊழல் இடம் பெற்றுள்ளது. இந்த உழல் மோசடி களை தடுத்து நிறுத்தத்தவறி விட் டார் என்பதே அவர்மீது எடுக் கப்பட்ட சட்ட நடவடிக்கையாகும்.

# இரும்புக்கரம் கொண்டு கராச்சிக் கலவரங்கள் அடக்கப்படும்

## –பாக். தகவல் தொடர்பு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

கராச்சியில் நடந்துவரும் தொடர் கலவரங்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும். இவ்வாறு பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக்ரஸித் அகமட் நேற்று கூறியுள்ளார்.

கராச்சியில் ஷியா முஸ்லிம்களின் மசூதி மீது சன்னி முஸ்லிம்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 14 பேர் பலியாகியதை யடுத்தே அவர் இவ்வாறு ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் கராச்சியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் 10பேர் உயிரிழந்ததும் தெரிந்தே.

# சீனாவிலுள்ள பாடசாலையில் ஆறு வடகொரியர் தஞ்சம்

(பெய்ஜிங்)

புகலிடம் கோரும் வடகொரிய பிரஜைகள் பலர் சீனத் தலைநகரிலுள்ள ஜேர்மன் பாட சாலை வளாகத்தில் தஞ்சமடைந் துள்ளனர் என அறிவிக்கப் படுகின்றது.

ஒரு பெண் அடங்கலாக 6 பேர் கட்டடச் சுவரைத்துளை யிட்டு பள்ளிக்குள் பிரவேசித்ததாக தென்கொரியாவின் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சீனாவிற்கான ஜேர்மன் இராஜதந்திரி இந்தச் சம்பவத்தினை ஊர்ஜிதம் செய்துள்ளதாகவும், மேலதிக விபரங்களை வெளி யிடமறுத்துவிட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் சம் பந்தப்பட்டிருப்பது வடகொரியா விலிருந்து தப்பித்தவர் தானா என்பதைக் கண்டறிவதே முதன் மையான காரியமாக இருக்குமென தென்கொரிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சனாதிபதித் தேர்தல்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சனாதி பதியை நேரடியாக தெரிவு செய் வதற்கான முதலாவது தேர்தல் பிரச்சாரம் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி நடை பெறவிருக்கும் இத்தேர்தலில் 16 கோடி 70 இலட்சம் பேர் வாக்க ளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தேர்தல் களத்தில் மூன்று போட் டியாளர்கள் இறங்கியிருக் கின்றனர்.

# தாயகத்தின் அபிவிருத்திக்கான திட்டமிடலில் சுற்றுச் சூழலையும் உத்தரவாதப்படுத்துவோம்

## -சூழல் பாதுகாப்பு பிரிவு அழைப்பு

**தாயகத்தின் அபிவிருத்திக்கான திட்டமிடலில் நிலைத்து நிற்கும் சுற்றுச் சூழலையும் உத்தரவாதப்படுத்த வேண்டியவர்களாக நாம் உள்ளோம் - இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

உலக சூழல் தினமான யூன் 5ஆம் திகதியை முன்னிட்டும் யூன் மாதத்தை சூழல் மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டதை முன்னிட்டும் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுற்றுச் சூழல் பற்றிய மக்களின் விழிப்புணர்வையும், அரசுகளின் கரிசனையையும் செயற்பாட்டையும் வேண்டி யூன் 5ஆம் திகதியை உலக சுற்றுச் சூழல் தினமாக ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடிவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் அபிவிருத்தித் திட்டம் ஒவ்வொரு வருடமும் அக்காலப் பகுதியில் முன்னுரிமை பெறவேண்டிய சூழற் பிரச்சினைகளை அடையாளங்கண்டு அதன் மேற் கவனம் கொள்கிறது 1970 களில் இருந்து கடந்த மூன்று தசாப்த காலத்தில் கடல்களிலும், சமுத்திரங்களிலும் சூழல் மாசுபட்டால் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு உயிர் விட்ட 'இறந்த வலயங்கள்' (Dead Zones) எண்ணிக்கையிலும் பரப்பளவிலும் அதிகரித் திருப்பது தெரிய வந்திருப்பதை யடுத்து இம்முறை 'கடல்களும், சமுத்திரங்களும்' கருத்தில் எடுக்கப் பட்டுள்ளன. 'தேவை! கடல்களும், சமுத்திரங்களும் பிணமாகவா- உயிருடனா!' (Wanted! Seasand Oceans: Dead or Alive) என்பது கருப்பொருள் ஆகியுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் துறைகளில் ஒன்றாகிய சூழல் பாதுகாப்புப் பிரிவும் யூன் 5ஆம் திகதியை மேற் குறிப்பிட்ட கருப்பொருளுக்கமைய உலக சூழல் தினமாகவும் யூன் 1-30 வரையான காலப் பகுதியைச் சூழல் விழிப்புணர்வு மாதமாகவும் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது.

தென் ஆசியாவில் கூடுதலான கடல் வளவாய்ப்பை இலங்கை தான் பெற்றிருக்கிறது. அதிலும் எமது தாயகத்தின் கடல் வளம் தனித்துவமான பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் மொத்தக் கரையோர நீளமாகிய 1739 கிலோ மீற்றர்களின் 1162 கிலோ மீற்றர்கள் அதாவது 67 சதவீதம் எமக்குரியது உவர் நீர் ஏரிகளிலும் ஏறத்தாழ 70 சதவீத கடல் நீர் ஏரிப்பரப்பு மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என்று எங்களுடைய பகுதிகளிலேயே விரிந்து கிடக்கின்றது. இதனால் நாட்டின் சதுப்புநிலத் தாவரங்களிலும் முக்கால் பங்குக்கும் அதிகமாக இங்குதான் வளர்கின்றன. தெற்கில் கண்டமேடை என்ற பகுதிஒடுங்கிக்காணப்பட வடக்கில் இது 40 கிலோ மீற்றர்கள் வரைக்கும் அகன்று செல்கிறது. சூரிய ஒளி அதிகம் ஊடுருவும் அளவிற்கு ஆழம்குறைந்த இக் கண்டமேடைப்பகுதிகளில் பெருவாரியாக பிளாந்தன்கள் ( PLANKTONS) என்றுசொல்லப்படும்நுண் தாவரங்கள் வாழ்வதால் கடல் உபஉணவு உயிரிகளும் பெருமளவிற்கு காணப்படுகின்றன.

பருவநிலையும் எங்களுக்குச் சாதகமாகவே உள்ளது. சோளகக் காற்று வீசி மன்னார் பக்கம் தாக்கம் ஏற்படுத்தினால் அங்கிருந்து கிழக்காக நகர்ந்தும், வாடைக்காற்று உரமாக வீசினால் கிழக்கில் இருந்து மேற்காகச் சென்றும் வருடம் முழுவதும் கடல்மடியில் தவழுவதற்கான வாய்ப்பை இயற்கை எங்களுக்கு மட்டுமே தந்துள்ளது.

ஆனால் கடல் வளத்தை அளவோடு நுகர்ந்து, அதன் இயற்கைச் சூழமைவைப் பேணி, வளமோடு வாழ்ந்த நாம், சிறிலங்கா அரசின் கடல்வலய தடைச்சட்டத்தினால் படிப்படியாக கடலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டோம் சமாதானத்திற்கானஇந்தக்காலகட்டத்திற்கூட எமது கடலுடன் முழுமையாக உறவாட முடியவில்லை. இடம்பெயர்ந்த கடலோரக் குடிகள் மீளக்குடியமர இன்னமும் அனுமதிக்கப் படவில்லை.பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரால் கடலோரக் கிராமங்கள் ஏறத்தாள இராணுவ கிராமங்களாகவே மாறிவிட்டிருக்கிறது.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழிநெடுகிலும் சுற்றுச்சூழல் குறித்த அக்கறையுடன் நாம் செயற்பட்டபோதும், கடந்த கால்நூற்றாண்டு காலப் போரில் சிறிலங்கா அரசுமேற்கொண்ட குண்டுவீச்சுக்கள், பொருளாதாரத் தடைபோன்றவை எமது தாயகத்தின் சுற்றுச் சூழலை மாசுறுத்தியும் வளங்களை சீரழித்தும் வந்துள்ளன.

போர் ஏற்படுத்திய சூழற் சீர்குலைவுகளுடன் பூச்சி கொல்லி மருந்துகளின் பாவனை, பிளாஸ்ரிக் பயன்பாடு, மிதமிஞ்சிய நீர்ப்பாசனம், கண்டற்காடுகளின் அழிவு போன்றவற்றினால் ஏற்படும் சூழற் பிரச்சினைகளுக்கும் உலகளாவிய சீர்கேடுகள் ஆகிய பூமி வெப்பமடைதல், ஓசோன் துளை போன்றவற்றிற்கும் நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

கூடவே தாயகத்தின் அபிவிருத்திக்கான திட்டமிடலில் நிலைத்து நிற்கும் சுற்றுச் சூழலையும் உத்தரவாதப்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

இந்தப் பின்னணியிலேயே தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவு யூன் 5 ஆம் திகதியை உலக சூழல் தினமாகவும், யூன் மாத காலப்பகுதியை சூழல் விழிப்புணர்வு மாதமாகவும் கடைப்பிடிக்க வேண்டுகிறது. இக்காலப்பகுதியில் சுற்றுச் சூழலியலாளர்கள், தன்னார்வக் குழுக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஊடகங்கள் போன்ற அமைப்புகள் சுற்றுச் சூழல் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த வல்ல செயற்திட்டங்களை வகுத்துத் தொழிற்படுமாறு வேண்டுகின்றோம்.

எமது தாயகத்தின் விடுதலையே சுற்றுச் சூழலின் விடுதலையாகவும், சுற்றுச் சூழலின் விடுதலையே எமது விடுதலையாகவும் உள்ள நிலையில் இந்தப் பணியை ஒரு தேசிய பணியாகக் கருதி ஒத்துழைக்கவும்.

## அரச ஊழியர் வேண்டுகை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை புகையிரத நிலையத்தில் இருந்து இலவசப் பயண அனுமதிச் சீட்டுடன் பயணம் செய்யும் அரச ஊழியர்களுக்கு உறங்கு நிலை ஆசனங்களை அதிகரிக்க வேண்டுமென அரச ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலவசப் பயணம் செய்யும் ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் ஆசனங்கள் நேரகாலத்துடன் முடிவடைந்து விடுவதால் ஏனையோர் பயணத்தை இடை நிறுத்தி விடுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

## கண்டெடுப்பு

திருமதி துரைராசா-உருக்குமணி 2ஆம் வட்டாரம் முள்ளியவளை என்னும் முகவரி இடப்பட்ட தேசிய அடையாளஅட்டை, நிரந்தரப் பயணஅட்டை மற்றும் சில பொருட்கள் உட்பட சிறிய பாக் ஒன்று யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனை புதுக்குடியிருப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிபெற்றுக் கொள்ளவும்.

## மரதனோட்டத்தில் முதலிடம்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால்வருடா வருடம் நடாத்தப்படும் மரதன் ஓட்ட நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திச் சென்ற வீரர்களில் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கண்ணகை அம்மன் விளையாட்டுக் கழக வீரரான இ. இராசேந்திரன் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இம்மரதன் ஓட்டம் கடந்தமாதம் 16ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்றது. இப்போட்டிக்கு இவ்வீரர் மூன்றாவது தடவையாக தோற்றியே இம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பூநகரி குமுழமுனை இலக்குக் கிராம நியாப்திட்ட வேலைகள் பூர்த்தி

(அலுவலகசெய்தியாளர்)

நியாப் திட்டத்தின் கீழ் 2002ஆம் ஆண்டுக்கென தெரிவு செய்யப்பெற்ற பூநகரி குமுழமுனை இலக்குக் கிராமம் மற்றும் ஒயாமாரி நீர்ப்பாசனத் திட்ட நிறைவு நிகழ்வு கடந்த 30ஆம் திகதியன்று நடைபெற்றது.

அன்றையதினம் பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற இக்கையளிக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. அரசஅதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டு கிராம அமைப்புக்களிடம் மேற்படி திட்டத்தை கையளித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிளி.மாவட்ட நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளர் எந்திரி ஏ.சி.வினோதராஜ், மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் காதர், பூநகரி பிரதேச செயலர் மற்றும் கிராம சேவை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். 7மில்லியன் ரூபா செலவில் நியாப் திட்டத்தின் மூலம் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பெற்றுள்ளது.

இது தவிர மேற்படி பிரதேசத்தில் ஜீவனோபாய ஆதார செயற்திட்டத்திற்கென75 மில்லியன் ரூபா வழங்கப்பெற்று நடைமுறைப்படுத்தப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு கடந்த 26ஆம் திகதி கேட்டித்தனம் வீதி நாடகம் உடையார் கட்டு குரவில் பாடசாலையில் இடம் பெற்றது. அதில் இடம் பெற்ற ஒரு காட்சி. (படம் பொ.சிவா)

## கைவிடப்பட்ட இராணுவக் காவலரண்கள் வவுனியாப் பகுதியில் புதுப்பிப்பு

### கூட்டு ரோந்தும் அதிகரிப்பு

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண்கள் மீண்டும் புதுப்பிக் கப்பட்டு வருகின்றன.

சிறலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இந்தக் காவலரண்கள் சிறிலங்கா இராணுத்தினரால் கைவிடப்பட்டிருந்தன. இவ்வாறு கைவிடப்பட்ட காவலரண்களே தற்சமயம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.மண்மூடைகள் மரக்குற்றிகள் புதிதாகப் போடப்பட்டு இராணுவம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

மேலும் வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்கா பொலிசாருடன் இராணுவத்தினரும் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் இத்தகைய வழமைக்கு மாறான செயற்பாடுகள் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (20)

## சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மு.ப 11.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் தலைமையில்கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.கரைச்சி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழு அமைப்பது தொடர்பாக நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி. க.சத்தியவதனி கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# மக்களின் வாழ்விடங்களை மக்களிடம் மீள ஒப்படைக்கக் கோரிக்கை

## தென்மராட்சி மக்கள் அமைப்புக்கள் படையினரிடம் விடுப்பு

(தென்மராட்சி)

**தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரி கடல் நீரேரியையும் அதனை அண்டிய மக்கள் வாழ்விடப் பிரதேசங்களையும் படையினர் தமது ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து மக்கள் பாவனைக்காக விட வேண்டும் என தென்மராட்சிப் பகுதி பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

1995 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மேற்படி பிரதேசங்களை ஆக்கிரமித்துத் தமது பாது காப்பு வலயங்களாக பிரகடனப் படுத்தியுள்ள சிறிலங்காப் படையினா தற்போதைய யுத்த நிறுத்த சூழ் நிலையிலும் அப் பிரதேசங்களை மக்கள் பாவனைக்காக விடவில்லை.

இதனால் இப் பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களது மீளக் குடியமர்வு பெரிதும பாதிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி சாவகச்சேரி கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களும் தமது தொழிலை இழந்துள்ளனர்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு மேற்படி பகுதிகளை விடுவித்து மக்கள் பாவனைக்கு விட படையினர் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ்.நகரில் காவலரண்கள் சிலவற்றை படையினர் அகற்றினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதிகளில் அமைந்திருந்த சிறிலங்காப் படை யினரது சில காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன.

1995ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் தமது இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த காலம் தொட்டே ஆரியகுளம் பகுதியில் அமைந்திருந்த சோதனைச் சாவடியுடன் கூடிய காவலரண்கள் மற்றும் புகையிரத நிலைய வீதிச் சந்தியில் அமைந்திருந்த காவலரண் மற்றும் பருத்தித்துறை வீதியில உள்ள ரயில்வே கடவைப் பகுதியில் இருந்த காவலரண்களே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மக்களது இயல்பு வாழ்வுக்கும் இயல்பான நடமாடடத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும காவலரண்கள் அகற்றப்பட வேண்டும என மக்கள் அமைப்புக்களும் பொது அமைப்புக்கள் ஒன்றியத்தினரும் விடுத்த கோரிக்கைகளைத் தொடர்ந்தே இவை அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை ஆரியகுளம் சந்தியில் உள்ள மற்றுமொரு காவலரண் புதிய வடிவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (33)

# தமிழ் ஆசிரியரின் பிரச்சினை குறித்து ஆராய இன்று பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று மாலை 3.30 மணியளவில் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் சகலபகுதிகளிலும் உள்ள தமிழ்ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, ஆராயும் விதமாக இக்கூட்டம ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கல்விச் சமூகத்திற்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் இக்கூட்டத்திற்கு யாழ மாவட்டத்தில் உள்ள சகல தமிழ் ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளையும தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(33)

# சட்டவிரோத மின் பாவனையாளரால் மின் பாவனையாளர் பாதிப்பு

யாழ்.இருபாலை மற்றும் கட்டப்பிராய் ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவோரது தொகை அதிகரித்துள்ளது.

சிறிலங்காப் பொலிசார், இலங்கை மின்சாரசபை காண்காணிப்பு அதிகாரிகள் ஆகியோரது கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மீறி இச்சட்டவிரோத மின்பாவனை இடம் பெற்று வருகிறது. இவ்வாறான சட்டவிரோத மின்பாவனைகளால் மின்ஒழுக்குகளும், மின் விபத்துகளும் ஏற்படும் அபாயம் காணப்படுவதுடன் சட்டரீதியாக மின்சார விநியோகத்தைப் பெறுவோர் உரிய அளவிலான மின் அழுத்தம் கிடைககாமையால் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர். (33)

# சுற்றுச் சூழல் மாதத்தில் த.பொ.மே.நிறுவனம் யாழ்.இல் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்குடாநாடெங்கிலும் சுற்றுச் சூழல தினம் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் சுற்றுச் சூழல் தினமான எதிர்வரும் 5ஆம் திகதியில் யாழ்.குடாநாடெங்கும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் சம்பந்தமாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இடம் பெறவுள்ளதுடன் நேற்றுமுதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை சுற்றுச்சூழல் மாதமாக (யூன்) அனுஷ்டிப்பதற்குரிய ஏற்பாடுகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இக்காலத்தில் சுற்றுச் சூழலின் சமநிலையைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச் சூழல் சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதமான பரப்புரைகள் என்பனவும் இடம் பெறும். (33)

# யாழ்.இல் பாரம்பரிய கலைகள் அருகிவருவதை கட்டுப்படுத்த கி.அ.சங்கங்கள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பாரம்பரிய கலைகள் அருகி வருவதைக் கட்டுப்படுத்தவென யாழில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் அன்னிய கலைகலாசாரப் பாரம்பரியங்களின் ஊடுருவல்கள் அதிகரித்து வருவதால் யாழ் மக்களின் பாரம்பரிய கலை பண்பாடுகள் அருகிப் போகும் தன்மையும் அன்னிய கலாசாரங்கள் மேலோங்கி வருகின்ற நிலைமையும் காணப்படுகிறது.

இதனால் யாழ்குடாநாட்டு தமிழ மக்களினது பாரம்பரிய கலைகள் அருகிப் போய்விடாது பாதுகாப்பதற்கு யாழில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் பாரம்பரிய கலைகளையும் கலைஞர்களையும் பேணி, ஊக்குவிப்புக்களையும வழங்கி வருகின்றனர். (33)

# ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலைக்கு யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்கள் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நாட்டுப்பற்றாளரும், சிறந்த ஊடகவியலாளருமான ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமைக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இது குறித்து அது அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தமிழ்த் தேசிய இனத்திற்காக குரல் கொடுத்து வந்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டது ஊடகத்துறைக்கு மட்டுமல்ல தமிழ் இனத்திற்கும் பேரிழப்பாகும்.

தமிழீழத் தேசிய தலைமையில் அசைக்க முடியாத நம்பிக்கையும் தமிழ் மக்கள் மீது அளவில்லாப் பற்றும் உடையவரான ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டது தமிழ் இனத்தின் குரலை வேரோடு சாய்க்க எடுத்துள்ள முயற்சியாகும். இதனை தமிழினம் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது. ஊடகவியலாளர்களைக் கொல்வதன் மூலம் தமிழினத்தை அடிமைப் படுத்த முடியாது என்பதை துரோகிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

கருணாவையும் அடியாட்களையும் வைத்து தமிழ் தேசப்பற்றாளர்களின் உயிர்கள் தொடர்ந்தும் பறிக்கப்பட்டு வருவது குறித்து அரசு பதிலளிக்க வேண்டும்.

சந்திரிகா அம்மையாரின் முன்னைய ஆட்சிக்காலத்தில் பத்திரிகையாளர் நிமலராஜன் யாழ் மண்ணில் படுகொலை செய்யப்பட்டார். இன்று இன்னுமொரு ஊடகவியலாளர் ஜி.நடேசன் மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது அரசின் அனுசரணையுடன் தான் நடைபெறுகிறதா? என சந்தேகம் கொள்ளவைத்துள்ளது. இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இனந்தெரியாத தேசவிரோதக் கும்பல்களால் இவ்வாறான கொலைகள் நடைபெறுவதற்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழர் தாயகப்பகுதிகளான வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீது தமிழ்மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். இவ்வாறான கொலைகள் போர்நிறுத்த மீறல்களாகும். இவற்றைத் தடுக்காவிட்டால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலை கேள்விக்குரியதாகிவிடும்.

நாட்டின் உயர் பதவியான சனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் சனாதிபதி சந்திரிகா அம்மையால் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்த முடியாவிட்டால் விடுதலைப்புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபை என்னும் இடைக்கால நிர்வாக அலகைக் கையளிக்க வேண்டும். புலிகள் இடைக்கால நிர்வாகத்தைப் பெறுப்பேற்றால் சிறந்த நிர்வாகத்தை நடத்திக் காட்டுவர்; தொடரும் கொலைகளை தடுப்பர் என்பதை உலகறியும், நாடறியும் இதனையே நாம் வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம். இதுபோன்ற படுகொலைகளை யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தொடர்ந்து எதிர்க்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முழுநிலாக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடும்பவள நிலையத்தின் ஏற்பாட்டில் முழுநிலாக் கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3.30மணியளவில் இடம் பெறவுள்ளது.

"யாழ் சமூகமும் முதியோர்களும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள குடும்பவள நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ் பல கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணா கருத்துக்களை வழங்குவார்.

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நவநாகரிக ஊடுருவல்களால் முதியோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் இளையவர்களால் முதியவர்கள் புறக்கணிக்கப் படுகின்ற தன்மைகள் என்பவற்றை மையமாகக் கொண்டே இதன்போது கருத்துரைகள் வழங்கப்படும்.(33)

# தென்மராட்சியின் பலபகுதிகளுக்கு இன்னும் மின் விநியோகம் இல்லை

## மக்கள் கவலை

யாழ் தென்மராட்சிப்பகுதிகளில் உள்ள பல பிரதேசங்களுக்கு இன்னமும் மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியின் சகல இடங்களிற்கும் முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தாலும் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புகளால் இப் பகுதிகளில் இருந்த மின்மாற்றிகள், மின்கம்பங்கள்,இணைப்புக் கம்பிகள் என்பன சேதமாக்கப்பட்டதால் இப்பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டது.

எனினும் இவ்வாறு தடைப் பட்டிருந்த மின் விநியோகத்தை மீண்டும் வழங்குவதற்கு மின்சார சபை மீளவும் நடவடிக்கைகளை எடுத்து தற்பொழுது மின்சாரம் வழங்கப்பட்டுவருகின்றது.

எனினும் சில கிராமங்களுக்கான மின்சாரத்தை விநியோகம் செய்வதற்கு மின்சாரசபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாததால் இவ்வாறான குறைகள் காணப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது. (33)

# யாழ். இல் 24 ப.நோ.கூ.சங்கங்களுக்கு யுத்தம் காரணமாக 5863 கோடி ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரு தசாப்த காலமாக இடம் பெற்ற கொடிய யுத்தம் காரணமாக 24பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5ஆயிரத்து 863கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக யாழ்..மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இதில் கட்டடங்களின் சேத மதிப்பீடு 2838 கோடி ரூபாவாகவும், வாகனங்களின் சேதம் 514இலட்சமாகவும், இயந்திரங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 339இலட்சமாகவும், தளபாடசேதம் 724 இலட்ச மாகவும், வணிகப் பொருட்களின் இழப்பீடு 1370 கோடியாகவும், பணம உணவு முத்திரை நஷ்டம் 75இலட்ச மாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.இந்த சேதவிபரத்தை சமாசம் அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

# தோல்வியில் துவண்டுபோயுள்ள கட்சியை எஸ்.பி.திஸாநாயக்க மீட்பாரா?

மொழியாக்கம்
வடிவேல்

"தோல்வியொன்றுக்குப் பின்னர் ஓர் அமைப்பின் செயற்பாடு தளர்வுறும்" என்பது சீனாவின் புரட்சித் தலைவன் மாவோ சேதுங்கின் வாக்காகும். தோல்வி



யின் மூலம் தற்காலிகமாகவேனும் வெறுப்புத் தோன்றும் அவ்வாறான வெறுப்பு ஐ.தே முன்னணிக்கு ஏற்பட்டது 2004 ஏப்ரல் 2ஆம் திகதியே. இரண்டு வருடங்களுக்கு முன்பு கிடைத்த வாக்குகளில் 5இலட்சம் குறைவாகவே அக்கட்சிக்குக் கிடைத்தது எதிர்பார்க்காதவாறான ஒரு தோல்வி.

தற்போது தீர்மான விசாரணை நடைபெறும் காலம் பொதுத் தேர்தலில் பெற்ற தோல்வியை ஜீரணிக்க முடியாத நிலையில் வடமேல் மாகாண சபைத் தேர்தலிலும் ஏற்பட்ட தோல்வி மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தது போலாகிவிட்டது. பொதுத் தேர்தல் தோல்வியை ஒரு மாகாணசபைத் தேர்தல் உறுதிப்படுத்திவிட்டது. ஆயினும் மீதமுள்ள மாகாணசபைகளில் குறைந்தது மத்திய, ஊவா, மேல்மாகாண சபைகளையாவது கைப்பற்ற வேண்டும் அல்லாவிடில் அக்கட்சி நீண்ட உறக்க நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

ஊழல்கள் எக்கட்சியிலும் இருக்கவே செய்கிறது. பொதுவாக நோக்கும்போது பொதுத் தேர்தல் தோல்வி மிகப் பெரிய தொன்றல்ல அவ்வளவு தூரம் மக்கள் வெறுத்து விடவில்லை. ஐ.தே.கட்சி 1970-77 காலப் பகுதியில் எதிர்க்கட்சியாக இருந்தவேளை கட்சிக்குள் பாரிய பிளவுகள் தோன்றின. பிரேமதாசாவின் தலைமைத்துவத்தின் கீழ் பிரஜைகள் முன்னணி வீதிப் போராட்டம் நடத்தியமை மறந்து விட முடியாது.

தோல்வி என்ற தீர்மானத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை ஆனால் கைவைத்தியம் என்ற உள்ளூர் ஆலோசனைகளைப் பெறாமல் வெளிநாட்டு மருந்து என்ற வகையில் ஆலோசனைகளைப் பெற ஐ.தே.க. பெருந்தொகைப் பணத்தை விரயமாக்கியது மட்டுமே பலன்.

ஆயினும் தோல்விக்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. மக்களிலிருந்து விலகிச் சென்றமை, நிவாரண உதவிகளை குறைத்தமை, பிரச்சாரப் பணிகளில் குறைபாடு கிராமம் என்ற பதத்தை இழந்தமை போன்றவை தோல்விக்கான காரணம் எனக் கூறப்படுகிறது. அத்துடன் "கட்சிக்குள் சனநாயகம் என்று ஒன்றில்லை. அதனால் சிறந்த புதிய தலைமைத்துவம் கிடைக்கவில்லை" என்பது போன்ற விமர்சனங்களும், ஆதங்கமும் எழுந்த வண்ணமே இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளும் மூன்று பிரிவாகக் கருதப்படுகிறது. முதலாவது கட்சி பிரபுக்கள் மயமாதல், இரண்டாவது அமைப்பாளர்களின் தலைமைத்துவப் போட்டி மூன்றாவது கட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் நகர மயமாகியமை.

இவ்வாறான தவறுகளுக்கு பரிகாரம் காணவும் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் ஐ.தே.முன்னணியிடம் திட்டங்கள் உள்ளனவா? ஆம் இப்போது ஆமை வேகத்தில் காரியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாகவே கட்சிக்குள் மாற்றங்களைக் கொண்டு வந்து எஸ்.பி.திஸாநாயக்கவின் தலையில் அனைத்தும் சுமத்தப்பட்டிருப்பது போல் தெரிகிறது. கட்சிக்கு புத்துயிர் ஊட்ட இவரையே பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

2004ஆம் ஆண்டுத் தேர்தலுக்காக கட்சியில் திறமையுடன் செயலாற்ற உபதலைவர் ஒருவர் இல்லாதிருந்தார். 2001ஆம் ஆண்டில் இப்பணியை காமினி அத்துக்கோறளை செய்தார். அவர் இறப்பதற்குக் கட்சிக்குள் ஏற்பட்ட சூழ்ச்சியே காரணம் என ஊடகங்கள் தெரிவித்தன. காரணம் அந்நாட்களில் அவருக்கிருந்த ஆதரவும் செல்வாக்குமே. அவர் அவ்வாறான ஆதரவைப் பெற்றது வீதிப் போராட்டம் நடத்தியே.

தற்போது அவ்வாறான வீதிப் போராட்டம் நடத்த ஒருவருமில்லை. எஸ்.பி.திஸாநாயக்க அவ்வாறான போராட்டகுணம் படைத்தவரல்ல. சிறீலசுதந்திரக்கட்சியிலிருந்த போதும் அவர் வீதிப்போராட்டம் நடத்தவில்லை. அவ்வாறு நடத்தியவர் இன்று பிரதமர் பதவியிலுள்ளார். ஆயினும் எஸ்.பி.செயல்வீரர் அமைதியாகவே இருந்து காரியத்தில் வெற்றிபெறுபவர். அவர் இப்போது ஐ.தே. கட்சியின் பிரதம(தேசிய) அமைப்பாளராகி விட்டார்.

அப்போது சிறிலங்கா சுதந்தரக்கட்சியில் அனுருத்த ரத்வத்தவுக்கு கிடைத்த பதவி இது. சிறந்த அமைப்பாளரான அவர் சிறில.சு.கட்சிக்கு புத்துயிர் ஊட்டியவர். அன்று எஸ்.பி.திஸாநாயக்கவும் அங்கு இரண்டாந்தர ஆலோசகராக இருந்தார். ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து சென்ற காமினி திஸாநாயக்க அத்துலத்முதலி போன்றோருடன் தொடர்பை ஏற்படுத்தியவரும் இவரே. அன்று ஐ.தே.கட்சிக்கு எதிராக ஊடகங்களில் எழுதியும் நுவரெலியாவில் றேணுகா ஹேரத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதும் எஸ்பி.திஸாநாயக்க ஆவார்.

கிராம மட்டத்திலிருந்து வந்த எஸ்.பி மீது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு கழுகுப் பார்வை இருந்தது. இவர் சிறில.சு.க.யின் பிரதமராக எஸ்.பி வரலாம் எனவும் சிந்தித்தார். அவருக்கு அன்று பிரேமதாசவுக்கு இருந்த ஆதரவும், மதிப்பும் இருந்தது. அவரைப் போன்று இவருக்கு அரசியலில் பங்கேற்க பரம்பரையில் ஏற்பட்ட உரிமை ஒன்றும் கிடையாது. ஆனால் தனது உழைப்பின் மூலம் முன்னேறினார்.

ஆயினும் 1994ஆம் ஆண்டு மேலும் அவர் முன்னேற இடம் கிடைக்கவில்லை 1977ஆம் ஆண்டு ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் லலித் போன்றோர் உருவாக்கிய இரண்டாவது அணி போன்று சந்திரிகாவுக்கு உருவாக்கத் தேவை இருக்கவில்லை காரணம் அனுருத்த, ரட்ணசிறி, கதிர்காமர் போன்றோரில் அவரது கட்சி தங்கியிருந்தது.

1998ஆம் ஆண்டில் வடமேல் மாகாண சபைத் தேர்தலை அனைவரும் கண்டித்த போதும் எஸ்.பி. கடைசியில் வெற்றியும் பெற்றார்.

இப்போது ஐ.தே.க.தனது மறு வாழ்வை நம்பியிருப்பது எஸ்.பி.திஸாநாயக்காவினாலேயே அது 94ஆம் ஆண்டுக்குப் பிறகான அவரின் செல்வாக்கினாலா?1994க்கு முன் பிருந்த செல்வாக்கினாலா என்பது தெரியாத விடயம்.

அவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக நீதிமன்ற விசாரணைக்கு சென்று வருகிறார் என்பதும் உண்மையே. அதனால் சந்திரிகா மீது வைராக்கியம் வைத்துள்ள பிரதான நபர் அவராகத்தான் இருக்க முடியும். காரணம் சந்திரிகா 94இல் வெற்றிபெறக் காரணமாக இருந்தவர் எஸ்.பி.அந்தக் கடன் 2001ஆம் ஆண்டு தீர்த்துக் கொள்ளப்பட்டு விட்டது.

எஸ்.பி. அரசியல் ஞானம் உள்ளவரே. மக்களின் கருத்துக்களையும் அறிந்தே உள்ளார். கிராமிய மட்டத்தையும் தெரியும். செயல்வீரர். வாக்கு இயந்திரம் போலவும் அவரால் செயற்பட முடியும்.

சிலவேளைகளில் அவர் சொன்னதை நிறைவேற்றி இருந்தால் ஐ.தே.கட்சி இந்தளவிற்கு தோல்வியைச் சந்தித்திராது. அதன் பொருளாதாரக் கொள்கை கிராமிய மக்களை உள்வாங்கவில்லை. ஆனால் அதற்காக எஸ்.பி.போராடினார். ஆனால் அன்றைய அரசு செவிசாய்க்கவில்லை.

இப்போதும் இவரைத் தேசிய அமைப்பாளராக நியமித்துள்ளவர்கள் பிரபுத்துவ, தலைமைத்துவ கலாச்சாரத்தை எதிர்க்கும் பிரிவினரே.

தற்போது நாட்டில் எந்த அரசும் சனநாயக முறையில் ஆட்சி நடத்துவதில்லை. அரசின் தலைமைத்துவம் ஒன்று பரம்பரை ரீதியாக அல்லது பிரதேசவாத ரீதியாக இவற்றை எல்லாம் நீக்கி புதிய ஐ.தே முன்னணி ஒன்று உருவாக வேண்டுமாயின், தனிப்பட்ட ரீதியாக செல்வாக்கு உள்ளவர்களுக்குப் பதவிகளை வழங்காது, நாட்டின் பொருளாதார அரசியல்சமூக நிலைகள் பற்றி சிந்திக்கும் ஒருவரே பதவியமர்த்தப்படவேண்டும்.

சுருக்கமாகக் கூறினால் ஐ.தே. முன்னணி தொடர்பாக சரியான கொள்கைகள் என்ன? யார் இதனை வழிநடத்துவார்? என்பது பற்றி சிந்திக்கும் மக்கள் தலைவர்களையும் அரசாங்கத்தையும் தெரிவுசெய்தல் வேண்டும்

---

# அரச ஊழியர் பயிற்சி நிறுவனத்தை சுயாதீன அமைப்பாகப்பேண வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு [illegible] வழங்கும் நிறுவனத்தை [illegible] அமைப்பாக பேண [illegible]ன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்தாலே ஆக்கபூர்வமான சேவைகளை ஆற்ற முடியும் என இதில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிறுவனம் அலுவலக முகாமைத்துவம், கணினி தொழில் நுட்பம், கணக்காய்வு, மொழிப் பயிற்சி, கேள்விப்பத்திர நடைமுறைகள் போன்ற துறைகளில் அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக வருடாந்தம் 60இலட்சம் ரூபாவைச் செலவிடுகின்றது என அதன் பணிப்பாளர் சுனில் அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

# சம்பள முரண்பாட்டிற்கு தீர்வின்றேல் நாடளாவிய வேலை நிறுத்தம்!

## சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகள் தொடர்பான கோரிக்கைகள் உடன் அரசாங்கம் தீர்த்து வைக்காதவிடத்து நாடளாவிய ரீதியிலான வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக சுகாதாரப் பகுதி தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.

சம்பளக் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வைக் காண அரசாங்கம் தவறினால் அது வேலை நிறுத்தத்திற்கே வழிவகுக்கும்.

தமது ஐந்து கோரிக்கைகள் குறித்து கூட்டணியினால் நிதி அமைச்சுக்கும் சுகாதார அமைச்சுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், உரிய அமைச்சுக்கள் தமது ஐந்து கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித் தராதுவிட்டால் நிச்சயமாக வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் எனவும் கூட்டணி எச்சரித்துள்ளது.

# ஜனசக்தித் திட்டத்தில் சேகரித்த நிதியை வழங்க இழுத்தடிப்பு

## -ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

திருக்கோயில் பிரதேச பொது மக்கள் ஜனசக்தி திட்டத்தினால் சேமித்த நிதி வழங்கப்படாமை குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து நிதி மீளப்பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு ஜனசக்தி திட்டத்தில் இணைத்துக் கொண்ட மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தென்னிந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் அலைக்கழிப்பு

தென்னிந்தியாவில் அகதிகளாக இருந்து விட்டு நாடு திரும்பும் மக்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள் என சிறிலங்காவின் முன்னாள் புனர்வாழ்வு அமைச்சரான ஜெயலத ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் அரசாங்கம் தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உதவுவதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்கவில்லையென குற்றம் சாட்டியுள்ளதுடன் தனது பதவிக் காலத்தில் இத்தகைய மக்களுக்கு இயந்திர அமைப்பு ரீதியான உதவிகள் வழங்கப்பட்டதாகவும் துரதிர்ஷ்டவசமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதைத் தொடர்வதில் ஈடுபாடு காட்டவில்லை எனவும் கூறியுள்ளார்.

## பரீட்சார்த்திகள் கவலை

(மட்டக்களப்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டியில் பரீட்சை நடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகியும் இன்னமும் பரீட்சை முடிவுகள் வெளியாகாததை யொட்டி பரீட்சார்த்திகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் 28ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இப்பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் பிரதான வீதிகள் திருத்தும் பணி எப்போது?

மன்னார் உயிலங்குளத்திலிருந்து செல்லும் ஆண்டாண் குளவீதி ஏற்கனவே பன்முகப்படுத்தப் பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் முழுமையான புனரமைப்பு இடம்பெறவில்லை.

இவ்வீதியில் கிரவல் போடப்பட்டுள்ளது. இதுவரை தார்போடப் படவில்லை. 5மைல் கொண்ட இவ் வீதியில் மக்கள் பயணம் செய்து வருகின்றார்கள். இதனால் அண்மையில் பெய்த மழை காரணமாக இவ்வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது. இதேபோல் பரப்புக் கடந்தானில் இருந்து மடுமாதாகோவில் செல்லும வீதியும் திருத்தப்படாமலுள்ளது. இவ்வீதி 20கிலோமீற்றா வரை தூரம் கொண்டது. இந்நிலையில் இவ்வீதி திருத்தப்பட இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (மி)




## 24.05.2004-30.05.2004

### 24


இரும்பு மனிதன்

➡இரும்பு மனிதன் என அழைக் கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த சாண்டோ எஸ்.ஸ்ரீதாஸ் காலமானார்.

➡ மக்கள் விடுதலை முன்னணியின் கொள் கைப்படி மற்றுமொருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகிடைக்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் விஜிதகுமார லியனகே பதவி விலகினார்.


கொட்டேகொட

➡மட்டக்களப்பு மாவட்டத்தில் மோசமடைந்திருக் கும் பாதுகாப்பு நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கிழக்கு மாகாணம் முழுவதற்குமான இராணுவ நடவடிக்கைக்கு கட்டளைத்தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்தகொட்டகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

➡கிழக்குப் பல்கலைக் கழக பொருளியல்துறைத் தலைவரும் கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத் தலைவருமான குமாரவடிவேல், தம்பையா இனந்தெரி யாதவர்களால் சுட் டுக்கொல்லப்பட்டார்.


தம்பையா

➡ தமிழ் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத் தின் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அலுவலகம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது.

➡ மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் யாழ் அதிகாரியைச் சந்தித்து குடாநாட்டின் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர் பாகக் கலந்துரையாடினர்.

### 25

➡ யாழ். செயலகம் முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் போராட்டம் காரணமாக ஊடகத்துறைப் பிரதி அமைச்சர்சேகு இஸ்ஸதீன் வருகையையொட்டி ஏற்பாடு செய்யப் பட்ட சந்திப்புகள் இரத்துச் செய்யப்பட்டன.

➡விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பக்கியெல 35ஆம் கொலனி கிராமத்திற்குள் 15 விசேட அதிரடிப் படையினர் அத்துமீறி நுழைந்தனர்.

➡ சர்வதேசநாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி மிஸ்ரா நிதியமைச்சர் சரத்அமுனுகமவைச் சந்தித்து இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் அதற்கான நிதி உதவிகள் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

➡ குடாநாட்டின் கல்விநிலை குறித்து ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த ஜேர்மன் நாட்டு நிபுணர்களான செல்வி அஸ்ரீன பெக்கர்,ஜனாப்மொஹமட் ஆகியோர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிப்பட்டனர்.


கலந்துரையாடல்

### 26.

➡அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த எரிக் சூல்ஹெய்ம் தலைமையிலான நோர்வேத்தூதுக்குழுவினர் பேச்சுக்கள் தொடர்வதற்கான நிலைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

➡யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சனாதிபதியின் புனர்வாழ்வு, புனரமைப்பு விடயங்களுக்கான ஆலோசகர் ஹரிம்பீரிஸ் தமிழ் மக்களிடையே இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதற்கு அரசும்,விடுதலைப் புலிகளும், மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பொது அமைப்புக்களும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

➡ரட்ணசிறி விக்கிரமநாயக்க,டியு. குணசேகர, பேராசிரியர் வில்வவர்ணபால ஆகியோர் அமைச்சர்களாகவும், பிரதிஅமைச்சர்களாகவும் பதவிப்பிரமாணம் செய்தனர்.

➡போராளிக் கலைஞர் மலை மகளின் புதிய கதைகள் நூல் வெளியீட்டு விழா நல்லூர் கலாச்சார மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.


நூல் வெளியீடு

➡நிதியமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் லிகுவின்ஜின், ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்தபடி நிதி கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

### 27.

➡எரிக்சூல் ஹெய்ம் சனாதிபதி சந்திப்பு உடன் பாடு எட்டப்படாமல் முடிவடைந்தது.

➡பிரதமர் மகிந்தராஜபக்ஷவை சந்தித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி அரசாங் கத்தின் அபிவிருத்தி நட வடிக்கைகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் குறித்து கலந்து ரையாடினார்.

➡ மூத்த பத்திரி கையாளர் கோபு அவர்களின் மூன்று நூல்களின் அறிமுக விழாவும், 50 ஆண்டு பத்திரிகைப் பணி யாற்றிய ஆய்வரங்கும், அவரைக் கௌர விக்கும் நிகழ்வும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடை பெற்றது.



### 28.

➡சர்வதேச பட்டினி ஒழிப்புக்காகப் பாடுபட்டமைக்காக சனாதிபதிக்கு ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனத்தின் செரின் பதக்கம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

➡ போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் அன்ரா ஸ்ரான்பேக் தலைமையில் சிறிலங்கா படைத்தரப்பிற்கும் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்குமான சந்திப்பில் யாழ். மாவட்ட நிலைதொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

➡ சனாதிபதியைச் சந்தித்த சவுதி அரேபியத் தூதுவர் முகமது அலி இலங்கை அபிவிருத்தியில் சவுதியின் உதவியும் பங்களிப்பும், வர்த்தகத் தொடர்பு, இரு நாடுகளுக்கும் இடையிலான இணக்கப்பாடு என்பன குறித்துக் கலந்துரையாடினார்.

### 29:

➡ ஈழமண்ணில் வளர்ந்துவரும் எழுத்தாளரும், கலைஞரும் நடிகருமான முல்லை ஜேசுதாசனின் "நீலமாகி வரும் கடல்" நூல் வெளியீட்டு விழா முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் மிகச் சிறப்புறநடைபெற்றது.


நீலமாகிவரும் கடல்

### 30.

➡ சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீட உறுப்பினர்களாகிய எம் இமானுல்லாவும், முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாப் பதியுதீன், நஜிப் ஏ.மஜித், உஷைசன்பைலா, ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டனர்.

---

- புகையிரத கடவை பணியாளர் பிரச்சினைக்கு -

## பேசித்தீர்வு காணப்படாவிட்டால் மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புகையிரத கடவை பணியாளர்களது பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசித் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பயனளிக்காதவிடத்து மனித உரிமைமீறல் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புகையிரத கடவை பணியாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்ஜெயானந்தமூர்த்தியை சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; காலம்சென்ற முன்னாள் சனாதிபதி பிரேமதாசவின் காலத்தில் 1989ஆம் ஆண்டு புகையிரத பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவ்வேளை 1000 ரூபா ஊதியம் வழங்கப்பட்டது மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் தற்போது 3000 ரூபா மட்டுமே கிடைக்கின்றதெனவும் இது தொடர்பாக தொழிற்சங்கப் போராட்டங்கள் நடத்தியும் எதுவித பலனும் கிட்டவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

## சத்துருக்கொண்டான் வீதியில் சோதனை கெடுபிடி அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிப்புக் குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு திருமலை வீதியிலுள்ள சத்துருக்கொண்டான் எனும் இடத்தில் பொதுமக்களை இறக்கி சிறிலங்காப் படையினர் கடுமையான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


விசுவமடு இளங்கோபுரத்தில் அமைந்துள்ள சோழர் சிறுவர் பூங்காவின் 11ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. இதில் கல்விபயிலும் சிறார்கள் உற்சாகத்துடன் போட்டியொன்றில் கலந்து கொள்வதைக் காண்க. (படம்:- சசி)

# நடத்தை தொடர்பான வகுப்புக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசியம்

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வலியுறுத்து

(கொழும்பு)

**"பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளின் உயர்ந்த சபையில் எவ்வாறு நடந்து கொள்வதெனத் தெரியவில்லை இது நடத்தை தொடர்பான தனிப்பட்டரியூசன் வகுப்புக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமாகியுள்ளது என்பதையே காட்டுகிறது".**

இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரான புத்தரகித மகாநாயக்க தேரர் சிறிலங்காவின் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்தனவிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் "பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் அண்மையில் நடந்து கொண்டவிதம் அனுமதிக்கப்பட முடியாதது பாராளுமன்றில் ஒழுக்கம் வருந்தத்தக்க அளவில் சீர் கெட்டுப்போயுள்ளது. இதற்காகத்தான் ஒரு தனிப்பட்ட வகுப்பு ஏற்பாடு செய்து குறித்த உறுப்பினர்களுக்கு நல்லநடத்தை,ஒழுக்கம் என்பவற்றைக் கற்றுத்தரலாம் என நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

- சவுதியில் கொல்லப்பட்ட -

# இரு இலங்கையர்களின் மரண விசாரணை நிறைவு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் கடந்த 29 ஆம் திகதி தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் உயிரிழந்த 2 இலங்கைப் பிரஜைகளின் மரண விசாரணைகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன.

இந்த மரண விசாரணையின் போது சவுதி அரேபியாவிற்கான இலங்கை தூதரக அதிகாரிகளும் சமுகமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த இருவரில் ஒருவர் நுவரெலியாவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்றும் மற்றையவர் கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த பிரதீப் சந்தனஅந்தோனி என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இந்தத் தகவல்களை சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர்இப்றாகிம்அஸ்தாத் தெரிவித்துள்ளார்.

## வீதிபுனரமைப்பிற்கு நடவடிக்கை

செல்வபுரம் -வட்டுவாகல்வீதி புனரமைக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.யு.என்.டி.பி. மற்றும் கார்ப் திட்டங்களினூடாக புனரமைப்பிற்கான ஏற்பாடுகளை அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். எனினும், இப் புனரமைப்பு வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது குறித்துத் தெரிவிக்கப்படவில்லை. (20)

- வடமேல் மாகாணத்தில் -

# அரச பணத்தில் தாய்லாந்து பயணம் பி.ச. தலைவர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 10 பிரதேச சபைகளின் தலைவர்கள் அரசாங்கத்தின் பணத்தைப் பயன்படுத்தி தாய்லாந்திற்கான 10 நாள் விஜயத்தினை மேற்கொண்டிருப்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இப்பாகம பிரதேச சபைத் தலைவர் மாத்திரம் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றவர் என்றும் ஏனையோர் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து தலா ஒரு இலட்சம் வரை பெற்றிருப்பதாக தெரிய வருகிறது.இவர்கள் நாடு திரும்பியதும் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று வடமேல் மாகாண சபைமுதலமைச்சர் அத்துல விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சியில் மூவரைத் தவிர ஏனையோருக்கு அமைச்சரவைப் பதவி!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட கூட்டமைப்பினர் தேர்தல் காலத்தின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென ஐக்கிய தேசிய முன்னணி தெரிவிக்கின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் பதவி வகிப்பதாக ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். கண்டியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார் அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல்காலத்தின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி பல வாக்குறுதிகளை மக்களுக்கு முன் வைத்து. இந்த வாக்குறுதிகள் மக்களின் மீது நேரடியாகத் தாக்கத்தை செலுத்தக் கூடியவை மக்கள் பல' சலுகைகளை இதன் மூலம் எதிர்பார்த்தனர் .இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது தொடர்பான பொறுப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கே .உள்ளது" என்றும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

-மாகாண சபைத் தேர்தலில்-

# வாக்காளர்களைத் தம்வசப்படுத்த ஐ.தே.கட்சி தீவிர முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்களை தம் வசப்படுத்தும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதன் அடிப்படையில் வாக்காளர்களைத் தேடி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தொகுதி வாரியாக தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடவுள்ளனர். எதிர்வரும் யூன் 7ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை கட்சியின் அமைப்பாளர்கள் சிரேஷ்ட உறுப்பினருடன் இணைந்து பிரச்சாரங்களில் ஈடுபடவுள்ளனர். இதன்போது கட்சியின் எதிர்காலக் கொள்கைகள் தொடர்பில் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்படவுள்ளன.இந்தச் செயற்பாடுகளுக்காகக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல குழுக்களை நியமித்துள்ளார். (32)

# புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் உல்லாசப் பயணிகள் வருகை வீழ்ச்சி!

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசாங்கத்தில் ஏற்பட்ட சடுதியான மாற்றத்தை அடுத்து உல்லாசப்பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது குறித்து உல்லாசப் பயணத்துறை அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் தகவல் தருகையில்,

"கடந்த ஆண்டு ஏப்ரலில் 33714 உல்லாசப் பயணிகள் வருகை தந்த இடத்தில் இந்த ஆண்டின் அதே காலப்பகுதியில் 30672 உல்லாசப்பயணிகளே வருகை தந்துள்ளனர் என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.இந்த வீழ்ச்சிக்கு அரசியலில் ஏற்பட்ட திடீர் மாற்றமும் அதன் மூலம் பொதுத் தேர்தல் நடைபெற்றமையுமே காரணமாகும்.

குறிப்பாக ஐரோப்பாவைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் அரசியல் ஸ்திரமின்மை, குழப்பம் மற்றும் தேர்தல் என்பவை காரணமாக குறித்த அக்காலப்பகுதியில் இங்கு வருகை தர விரும்பவில்லை எனினும் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உல்லாசப் பயணிகளின் வருகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது." என்றும் தெரிவித்துள்ளார். மற்றொரு அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், உல்லாசப்பயணிகள் குழப்பமற்ற நிலையான அரசியலையே விரும்புவார்கள் கடந்த இரண்டு வருடமாக முன்னைய அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமையால் உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரித்திருந்தது என்று கூறியுள்ளார்.

-மத்திய மாகாண சபை-

# முதலமைச்சர் வேட்பாளராக சரத் ஏக்கநாயக்க தெரிவு

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மத்திய மாகாணத்திற்கான முதலமைச்சர் வேட்பாளராக சரத் ஏக்க நாயக்கவின் பெயரையே பிரேரிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் சனாதிபதி மாளிகையில் நடந்த கூட்டமொன்றில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன இத்தீர்மானம் பற்றி அறிவித்துள்ளார்.இந்தக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.


## 4ஆம் ஆண்டின் நினைவில்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 - 12 - 1962 |  | 18 - 05 - 2000 |

திதி 02.06.2004

## அமரர் திருமதி நிர்மலாதேவி சிவகுமார்

பளைகச்சார்வெளி பன்னிரு தியாகிகள் பாலர் பாடசாலை ஆசிரியை

கிளி/கிரான்சி அ.த.க.பாடசாலை ஆசிரியை

"காலங்கள் கரைந்தாலும்
பாசங்கள் கரைவதில்லை"

02.06.2004 அன்று இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆசிரியர்களை கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

என்றும் உம் நினைவுடன்
அன்புமகள் தர்சா
அன்புத்தாய் பளையம்மா,
உடன்பிறப்புக்கள்.

இத்தாவில்
பளை

தற்போதைய முகவரி
இல.23, திருநகர் வடக்கு
கிளிநொச்சி.

தகவல்
தாயார்

(4559)


# ஆசிரிய சேவையில் பாரபட்சம்; விசாரணை நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

தற்காலிக நியமனம் பெற்றோரை ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்வதுபதவி உயர்வுகளை வழங்குவது போன்ற நடைமுறைகளில் இழைக்கப்படுவதாகக் கூறப்படும் பாரபட்சம் பற்றி விசாரணை நடத்தப்படவுள்ளது. இதற்காக ஒருங்கிணைப்புக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் பல தொழிற்சங்க அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம் பெறுவதாகவும் கல்வித்துறைசார் கூட்டுத்துறை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இக்குழுவின் அங்கத்தவர்கள் அண்மையில் கல்வி அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் இதன்போது போதிய தகைமைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கென முதலாம் தரத்தில் பதவி உயர்த்துவதற்கும் சுற்றறிக்கையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் ஆசிரியர்சேவைக்கான ஆட்சேர்ப்புக்கள் அந்தத்துறை சார்ந்த யாப்பிற்கு அமையவே மேற்கொள்ளப்படவேண்டுமென குழுவின் அங்கத்தவர்கள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு இலவசமாக தொழிற்பயிற்சி வழங்க வேண்டுமெனவும் அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நிலையியல் கட்டளைகளுக்கு மாறாக அரசாங்கம் செயற்படுகின்றது

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மீறி செயற்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. மாதம் ஒன்றுக்கு8நாட்களுக்காவது நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற வேண்டும், எனினும் அரசாங்கம் இதனை வேண்டுமென்றே தவிர்த்து வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சிறுபான்மை அரசாங்கம் என்பதாலேயே இவ்வாறான செயலை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அவர்குற்றம்சுமத்தியுள்ளார். (32)

# எதிர்க்கட்சித் தலைவராக அத்வானி
# நாடாளுமன்றக் குழுவின் அவைத் தலைவராக வாஜ்பாய்

(புதுடில்லி)

**இந்திய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக எல்.கே. அத்வானி தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். தலைநகர் டில்லியில் நடைபெறவுள்ள பாரதிய ஜனதாக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெறவுள்ளது.**

பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு.வெங்கையா நாயுடுவின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் திரு.வாஜ்பாய் உள்ளிட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள் பலரும் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர். இதில் பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவராக அத்வானி தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இதற்கேதுவாக அக்கட்சியின் சட்டவிதிகள் திருத்தப்படவுள்ளன.திரு.அத்வானி எதிர்க்கட்சித் தலைவராவதை முன்விட்டு பாரதிய ஜனதாக்கட்சி நாடாளுமன்றக் குழுவின் அவைத் தலைவர் என்ற புதிய பொறுப்பு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக திரு.வாஜ்பாய் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.



சிறிலங்கா வெளியுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஆறு நாள் இந்திய விஜயத்தின் போது இந்திய வெளியுறவுத் துறை அமைசச்ர் நட்வந்சிங்குடனான சந்திப்பின் போது

## முன்னாள் அமைச்சர்கள் மீது பழிவாங்கினால் கூட்டணி அரசு கடும் விளைவைச் சந்திக்கும்

### -சமாஜ்வாதிக் கட்சி எச்சரிக்கை

(புதுடில்லி)

பா.ஜ. கூட்டணியில் இடம் பெற்றிருந்த அமைச்சர்கள் மீது பழிவாங்கும் எண்ணத்துடன் நடவடிக்கை எடுத்தால் திரு.மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இவ்வாறு அக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் சமாஜ்வாதிக் கட்சி எச்சரிக்கை செய்துள்ளது.நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலர் அமர்சிங் மத்திய அரசு தவறான பாதையில் சென்றால் விமர்சிக்கத் தயங்கமாட்டோம் என்றும் ஜோர்ச் பெர்ணான்டஸ் போன்ற தலைவர்கள் மீது பழிவாங்கும் போக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டால் கடும்விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும் என்றும கூறியுள்ளார்.

## அமெ.-இந்தியாவிற்கிடையே உயர்நிலைப்பாதுகாப்புப் பேச்சுஆரம்பம்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே உயர் நிலைப் பாதுகாப்புப் பேச்சுக்கள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

புதிய காங்கிரஸ் அரசு பதவி ஏற்றுள்ளதையடுத்து முதலாவது உயர் நிலைப் பாதுகாப்புப் பேச்சு வார்த்தைகள் இதுவாகும்.

முக்கிய விடயங்கள் இராணுவப் பயிற்சிகள் மற்றும் இராணுவ சாதனங்களை வாங்குவது குறித்து இன்றும், நாளையும் விவாதிக்கப்படவுள்ளது.

இந்தியக் கடற்படைக்கான கண்காணிப்பு விமானங்கள் வாங்குவது குறித்தும் இந்த மூன்று நாட்கள் நடைபெறுகின்ற பேச்சு வார்த்தைகளில் ஆராயப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலா அஜேத் பிரசாத் இந்தியக் குழுவிற்கு தலைமை தாங்குகின்றார். அமெரிக்க குழுவிற்கு அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் டக்கஸ்றே தலைமை தாங்குகின்றார்.

## 3ஆவது ஆசிய முதலீட்டு மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் மூன்றாவது ஆசிய முதலீட்டு மாநாடு நேற்று கொழும்பு லாசாவில் இடம்பெற்றுள்ளது.

இம்மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஆசியநாட்டு முதலீட்டாளர்களும் பங்குபற்றியுள்ளார்கள். இந் நிகழ்வில் 90 இலங்கைக் கம்பனிகளும் பங்கு பற்றியுள்ளன.

இலங்கை கொண்டிருக்கும் சிறந்த பொருளாதாரக் கொள்கையினையும் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் சமாதான சூழ்நிலையையும் ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்காவுடனும் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் சுதந்திர வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவிருப்பதாக சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஆசிய முதலீட்டாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்தக் கருத்துக்களை பிரதமர் முன்வைத்தார்.

ஆசியமற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினுள் அடங்கும் நாடுகளுக்கிடையே தனியார் துறையை ஊக்குவிப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு மாத்திரமன்றி பொருளாதார அபிவிருத்திக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கப்போவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்தார்.

## -ராஜீவ் கொலை விசாரணைக்கான- விசேட குழுவின் நடவடிக்கை மேலும் ஒருவருடம் நீடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட விசேட குழுவின் நடவடிக்கைக் காலம் மேலும் ஒருவருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னணியில் மிகப் பெரும் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை விசாரணை செய்வதற்குரிய கால அவகாசம் தமக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்த ஆணைக்குழு விடுத்த வேண்டுகோளையடுத்து புதிய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சு இந்த கால நீடிப்பை வழங்கியுள்ளது.

இதேவேளை ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.கழகம் இந்தக் கால நீடிப்பு கவலை அளிப்பதாக தெரிவித்துள்ளது. ராஜீவ் காந்தி கொலையுடன் தி.மு.க.விற்கு தொடர்பிருக்கலாமென ஏற்கனவே இந்த ஆணைக்குழு குற்றம் சாட்டியமை குறிப்பிடத்தக்கது.

புலனாய்வுத்துறை அதிகாரிகள் பலரை உள்ளடக்கிய இந்த விசேட குழுவிற்கு ஒருவருட நீடிப்பை வழங்கியது தொடர்பாக ஆளும் காங்கிரஸ் தனது கூட்டணிக் கட்சிகளுடன் முரண்பாடுகளைக் கொண்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கைக்கு விஜயம்செய்ய மன்மோகன்சிங்கிற்கு சந்திரிகா அழைப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அழைப்புவிடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது சனாதிபதியின் அழைப்புக் கடிதத்தை இந்தியப் பிரதமரிடம் கையளித்துள்ளார்.

## அரசு நிதி வழங்காமையால் ஒப்பந்தக்காரர் கைதிகளுக்கு உணவுவழங்குவதை நிறுத்த முடிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலுமுள்ள கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிறுத்தப்படும் சாத்தியம் தோன்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து மாதகாலமாக சிறைச்சாலைகளுக்கு உணவு விநியோகம் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவை, நூறு மில்லியன் ரூபா நிலுவைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்காது விடில் அடுத்த மாதம் முதல் அவர்கள் விநியோகத்தை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.இதனால் நாட்டிலுள்ள சுமார் 50 சிறைச்சாலைக் கைதிகளுக்கான உணவு விநியோகம் கேள்விக்குள்ளாகும் நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இப்பிரச்சினை தொடர்பாக பதில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் குணரத்ன குருப்பு திறைசேரியுடன் தொடர்புகொண்டு கூடிய விரைவில் சம்பந்தப்பட்டவர்களுக்கான கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். முன்னர் ஐ.தே.முன்னணி அரசு காலத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த சிறைச்சாலைத் திணைக்களம் தற்போது நீதியமைச்சின் கீழ் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இல.க்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் ஆர்மிரேஜ் தலைமையில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்று பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸில் ஆரம்பமாகியது.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் கிரிஸ்டினா றொக்கா, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிப்பாளர் கிறிஸ்பற்றன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## வீதியில் தேர்தல் பிரச்சார வசனங்கள் எழுதிய நால்வர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை மீறி பெருந்தெருக்களில் தேர்தல் தொடர்பான பிரச்சார வாசகங்கள் எழுதிக்கொண்டிருந்த 04 பேரை தம்புள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் ஜே.வி.பி ஆதரவாளர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற நடவடிக்கைகளை எவ்வகையிலுமே அனுமதிக்கப்போவதில்லை என்றும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும் தாம் தேர்தல் ஆணைக்குழுவினது பணிப்புரைகளுக்கு மாத்திரமே கட்டுப்பட்டவரென்றும் தம்புள்ள பொலிஸார் கூறியுள்ளனர்.

## பல்கலை விரிவுரையாளர்களுக்கு வெளிநாட்டில் உயர்கல்வி

### -சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் கல்விமான்கள் வெளிநாடுகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டு வருகின்றன. சமீபத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. பல் கலைக்கழகங்களுக்கான மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளும் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களும் இக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர். சமூகவிஞ்ஞானம், மானிடவியல், கலை ஆகிய துறைகளில் முதுமானித்துறைகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு இலங்கையில் போதியவசதிகள் இல்லையென்ற விடயமும் அக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் இந்திய, யப்பானிய, பிரிட்டன், கியூபா ஆகியநாடுகளைச் சேர்ந்த தூதரகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர். இக் கூட்டத்திற்கு கல்வி அமைச்சின் செயலாளர் தலைமை தாங்கியுள்ளார்.

# கிறிஸ்கெய்ல் நிதானமான துடுப்பாட்டம்
## 2.ஆவது இனிங்ஸில் சோடைபோன பங்களாதேஷ்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் பங்களாதேஷ் அணிக்குமிடையில் சென்லூசியாவில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் நேற்று முன்தினம் பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சர்வான் பங்களாதேஷ் அணியின் மூன்று விக்கெட்டுக்களை 8 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு கைப்பற்றினார்.

இதில் ஏற்கனவே முதல் இனிங்ஸில் 113 ஓட்டங்களைப் பெற்ற கபிபுல் பசார் 25 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். முதல் இனிங்ஸில் 81 ஓட்டங்களைப் பெற்ற மற்றுமொரு வீரரான முகமட் அஷ்ரபுல் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். முன்னதாக பங்களாதேஷ் அணியின் முதல் இன்னிங்ஸ் எண்ணிக்கையான 416 ஓட்டங்களுக்குப் பதிலளிக்குமுகமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி கிரிஸ் கெய்லின் 141 ஓட்டங்களுடன் 352 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்படி மேற்கிந்தியத் தீவை விட 158 ஓட்டங்கள் முன்னிலையில் பங்களாதேஷ் அணி முன்னிலையில் உள்ளது. இப்போட்டியில் பங்களாதேஷ் அணி தனது கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இனிங்ஸில் 400 இற்குமேல் ஓட்டங்களைப் பெற்றது. இது முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. 2000-01 காலப்பகுதியில் அது இந்தியாவுக்கெதிராக ஒரு



இனிங்ஸில் 400 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நேற்று போட்டியின் இறுதி நாளாகும்.

# இந்திய கிரிக்கெட் அணி வலுவானது மனவலிமை கொண்ட வீரர் ராகுல் ராவிட்
## -ஸ்ரீவ்வோ

இந்திய கிரிக்கெட் அணி வலுவானது என்று அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னணித் தலைவர் என்று புகழப்பட்ட ஸ்ரீவ்வோ கடந்த ஆண்டு இறுதியில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றார்.


தனது விருப்பப்படி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையையும் முடித்துக்கொண்டார்.

இந்தியாவின் கோவைக்கு வந்துள்ள ஸ்ரீவ்வோ நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அதில் தெரிவிக்கும் போது;

தற்போதைய இந்திய கிரிக்கெட் அணி வலுவானதாக இருக்கிறது தொடர்ந்து இந்திய அணி தங்களின் தரத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

இந்திய அணியில் ராகுல் ராவிட்டை எனக்கு நன்றாக பிடிக்கும் காரணம் சிக்கலான சூழ்நிலையில் அவர் எந்தவித பதற்றமும் அடையாமல் ஆடும் மனவலிமை கொண்டவர். முரளிதரன் பந்துவீச்சுக் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது நான் அது குறித்துக் கருத்துக் கூறமுடியாது, சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் தான் முடிவு செய்யவேண்டும் என்றார்.

இதனைவிட இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர்ஹுசைனின் பெருந்தன்மைமிக்க ஓய்வு அறிவிப்பை தான் வரவேற்பாதாகவும் ஸ்ரீவ்வோ தெரிவித்தார்.



லொஸ் ஏஞ்சல்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய கூடைப்பந்தாட்ட கழகத்தின் ஆறாவது போட்டியில் ஈட்டிய வெற்றியைக் கொண்டாடும் ஹார்ல் நலோன், ஹாரிபேரன் ஹொப் பிரியன்ற் (பின்இடது) றிக்பொக்ஸ் (பின்மத்தி) சாகில் ஒனில்

# பாகிஸ்தான் வீரர்களின் உடற்தகுதியில் அணித்தலைவர் இன்சமாம் கவனம் செலுத்துவார்

எதிர்வரும் யூலை 16ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் கிரிக்கெட்



அணியின் உடற்தகுதியில் அணித் தலைவர் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்.

அவ்வணி அண்மையில் இந்திய அணியுடனான ஒருநாள் மற்றும் டெஸ்ட்போட்டிகளில் சந்தித்த தோல்விகளையடுத்து அவர் அணிவீரர்களின் குறிப்பாக உலகில் அதிகூடிய வேகப் பந்து வீச்சாளரான சொகைப் அக்தரின் உடல் நிலை பற்றி அறிய மிக ஆவலாக இருப்பதாகத் தெரியவருகிறது. இந்தியாவிடம் தோல்வி காண்பதற்கு அக்தரின் உடல் தகுதி முக்கிய காரணமாக இருந்ததால் ஆசியக்கிண்ணப் போட்டிகளில் இவ்வாறான தோல்விகளை தவிர்ப்பதே தமது நோக்கம் என பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளதுடன் வீரர்களின் உடற் தகுதி தொடர்பாக அந்நாட்டு கிரிக்கெட் சபை (PCB) யிடம் விசாரிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக தமது அணிவீரர்கள் காயத்தினால் அவதிப்படுவதாகவும் இது பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் இன்சமாம் தெரிவித்துள்ளார். தற்போது பிராந்தியப் போட்டிகளில் பங்கேற்றுள்ள வீரர்களை ஆசியக் கிண்ணப் போட்டிக்கான அணியில் இணைத்துக்கொள்ளத் தமது நாட்டு கிரிக்கெட் சபை(PCB) யின் உதவியை நாடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சூடுபிடிக்கும் பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டி வில்லியம் சகோதரிகளும் அதிர்ச்சித் தோல்வி

பிரான்சில் நடைபெற்று வரும் பிரெஞ் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் வில்லியம் சகோதரிகள் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளனர்.

வீனஸ் வில்லியம்ஸ் சகநாட்டு வீராங்கனையான ஹெப்ரியாடியிடமும் சேரினா வில்லியம்ஸ் ரஷ்ய வீராங்கனையான மேரியா சரபோவா விடமும் தோல்வி அடைந்தனர்.

இதனால் பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்த முன்னணி வீரர்களின் வரிசையில் வில்லியம்ஸ் சகோதரிகளும் இணைந்துள்ளனர். இதே வேளை ஆண்களுக்கான பிரெஞ் இரட்டையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் டொட்டென், மைக்ரோன் ஆகியோர் சிம்பாப்வே நாட்டின் போன் பிளேக் மற்றும் கெபன் உயற்றி ஆகியோரே வெற்றிபெற்றுள்ளனர். இரண்டாவது போட்டியில் இந்தியாவின் மகேஸ்பூபதி பெலாரஸ் நாட்டின் மைக்மெரியா ஜோடி ஆர்மோனியாவின் சிபிசியா மற்றும் ஜேர்மன் நாட்டின் கெட்சன் பயோஸ ஆகியோரை 6-3,6-4 என்ற முறையில் வெற்றி கொண்டுள்ளனர்.



தென்கிழக்கு லண்டனில் 'வெலி' உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச சினேகபூர்வ ஆட்டத்தில் நைஜீரியாவில் ஒபாபெனி மார்டின் பந்தைத் தலையால் இடிப்பதை அயர்லாந்தின் மாட் கொலன்ட் அவதானிக்கிறார்.

# முன்னாள் கிரிக்கெட் சபைத்தலைவர் வழக்கு மூன்று நீதிபதிகள் முன்நடத்தப்படும்

முன்னாள் கிரிக்கெட் சபைத்தலைவர் திலங்க சுமதிபாலவின் வழக்கு விசாரணை மேன்முறையீட்டு நீதிபதிகளின் முன்னால் நடத்தப்படப்போவதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இதற்கான அனுமதி கோரி மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவருக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று திலங்க சுமதிபாலாவின் பிணை கோரிய மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தெரிவித்தார். ஏற்கனவே இந்த மனு விசாரணையில் இருந்து நீதிபதி நிமால் காமினிஅமரதுங்க விலகியிருந்தார். இதனை அடுத்து நேற்று அன்றூ சோமவன்ச, காமினி அபயரட்ண ஆகிய நீதிபதிகள் முன்னால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் வழக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

# -பொன்.விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கால்பந்துப் போட்டி-
# உருத்திரபுரம் அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவு மற்றுமொரு அரையிறுதி ஆட்டம் இன்று

நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தி நினைவாக கிளி.உதைபந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்படும் கிளி.மாவட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற கால் இறுதிப்போட்டியில் உருத்திரபுரம் சந்திரோதயா அணி 2-0 என்ற கோல் கணக்கில் பளை சென். பீற்றர்ஸ் அணியை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

சீ.மகேஸ்வரன், மா.ராஜ்குமார் ஆகியோர் கோல் போட்டனர். தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் உருத்திரபுரம் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியை வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவானது பா.தேவகுமார் கோல் போட்டார்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் இ.சிவலிங்கம், க.புவனேந்திரராசா, சி.ஜெயக்குமார், வெ.சிவனேசன், ப.ஆனந்தராசா ஜோயல் பியசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று நடைபெறும் மற்றொரு அரையிறுதிப் போட்டியில் சந்திரோதயா உழவர் ஒன்றியம் அணிகள் மோதவுள்ளன. நாளை மூன்றாவது இடத்தைப் பெறும் அணிக்கான போட்டி இடம் பெறும் இதில் லக்கிஸ்ரார் அணியுடன் இன்றைய போட்டியில் வெற்றிவாய்ப்பைத் தவறவிடும் அணிமோதும். (சோ)






# கிளிநொச்சியில் சதுரங்கப் போட்டியை ஊக்குவிக்க நடவடிக்கை

கிளிநொச்சியில் சதுரங்கப் போட்டிகளை ஊக்குவிக்க கிளி. மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதற்கான சங்கம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கையாக எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்படும் சதுரங்க சங்கத்தை இலங்கை சதுரங்க (தாய்) சங்கத்தில் பதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக திரு.சு. கனகராசா தெரிவித்துள்ளார். எனவே ஆர்வமுடைய அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (சோ)



## சிந்தனைக்கு

தேச விடுதலை என்பது எல்லாரது விடுதலையையும் விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள்; ஒரு தேசிய இலட்சியம். இந்த இலட்சியத்தில் எல்லாரும் பங்குகொள்ளும் பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப்பெறும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 02-06-2004


## யார் பொறுப்பு?

"மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் சுட்டுக்கொல்லப் பட்டமையானது ஊடகவியலாளர் உரிமைக்கு யார் பொறுப்பேற்பது என்ற கேள்வியை வலுவாக்கியுள்ளது" என்ற சிறிலங்காவின் ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் சேகுஇஸ்ஸதீன் எழுப்பியுள்ள கேள்வியானது இன்று முக்கியத்துவம் மிக்கதொன்றாகவே உள்ளது.

ஏனெனில் ஊடகவியலாளர்கள் அதிலும் தமிழ் ஊடகவியலா ளர்களின் பாதுகாப்பு என்பது இன்று பெரும் கேள்விக்குரிய தொன்றாகவே மாறியுள்ளது. ஆனால் பிரதி ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் சேகுஇஸ்ஸதீன் இத்தகையதொரு கேள்வியை எழுப்பியிருப்பதானது நாட்டின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு எனச் சனாதிபதி யொருவர் கேள்வி எழுப்புவதற்கு ஒப்பானதாகும். ஏனெனில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்கவேண்டியவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்புவது தமது பொறுப்புகளைத் தட்டிக்கழிப்பதற்கு ஒப்பானதாகும்.

ஏனெனில் ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கே உரியதாகும். அதாவது அரசின் பாதுகாப்புப் படையினருக்கே உரியதாகும். இந்நிலையில் அமைச்சுப்பதவியை வகிக்கும் – அதிலும் ஊடகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் ஒருவர் ஊடகவியலாளர் உரிமைக்கு "யார் பொறுப்பு?" என்ற கேள்வியை எழுப்புவது தமது பொறுப்பை அவர் புறந்தள்ளுவதாகவே இருக்கும். அதுமட்டுமல்ல இப்படுகொலையானது இராணுவத்தின் கட்டுப்பாட்டுப்பகுதயிலேயே இடம்பெற்றமையால் இவற்றிற்கான பொறுப்பை இராணுவமும், அரசாங்கமுமே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஊடகவியலாளர் ஜி.நடேசன் அவர்களின் படுகொலையானது எதற்காக மேற்க் கொள்ளப்பட்டது? ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பதை அனுமானிப்பது கடினமானதொரு காரியமல்ல. அத்தோடு, இறுதியாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையில் தான் எழுப்பிய கேள்விக்கு அவரே எடுத்துக் காட்டாகிவிட்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல்துறை தலைவர் தம்பையா கொலைசெய்யப்பட்டிருந்ததனை விமர்சித்திருந்த அவர் ஏப்ரல் முதல் வாரத்தில் மட்டக்களப்பு பிராந்தியம் இருந்த நிலைக்கு மீண்டும் பின்தள்ளப்படுமோ என்ற கேள்வியினை ஒரு சாரார் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது எனத் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

"நேரடியாக எந்தவித அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடாத வவுனியாவைச் சேர்ந்த விரிவுரையாளர் தம்பையா ஏன் கடப்பட்டார் என்பதற்கான பதில்கள் கிட்டாததினாலேயே இந்தக் கேள்வி எழுந்துள்ளது. இந்தக் கேள்வி சரியா என்பதற்கு நடைபெறும் சம்பவங்களே கட்டியம் கூறும்" எனத் தனது கட்டுரையில் மேலும் தெரிவித்திருந்தார்.

அமரர் ஜி.நடேசன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அவரே பலியாகிவிட்டமை துரதிஷ்டவசமானது. இதேபோன்று ஜி.நடேசன் அவர்கள் ஊகித்ததுபோன்று மட்டக்களப்பு பிராந்தியத்தில் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள அச்சமும் பதட்டமும் தமிழ்த் தேசியத்திற்கு சவால் விடும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதிலும் கேள்விக்கு இடமே இல்லை.

ஏனெனில் பொருளியல்துறைத் தலைவர் தம்பையா நேரடியாக எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவர் என்றபோதும் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர். அதேவேளை ஊடகவியலாளர் ஜி.நடேசன் அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு வெளிப்படையாக ஆதரவுடன் செயற்பட்டு வந்தவர். இவ்விருவரும் சுட்டுக்கொல்லப்பட்டமையானது தமிழ்த் தேசியத்திற்கு சவால் விடுப்பது போன்று மேற்கொள்ளப் பட்டவை என்பதில் கேள்விக்கே இடமில்லை.

ஆனால், இக்கொலைகளுக்கு வாய்ப்பளிக்க கருணா செய்த துரோகமே காரணம் என்பது வெளிப்படையானது. ஏனெனில் இன்று கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் நிகழும் வன்முறைச் சம்பவங்களுக்கு கருணாவின் பெயர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இப்படுகொலைகள், மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் அனுசரணை இன்றி எதனையும் மேற்கொள்ள முடியாது என்பது அராய்ந்தறியவேண்டியதொன்றல்ல.

ஆனால் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு என்பது இலங்கையைப் பொறுத்தது என்றுமே கேள்விக்குரியதொன்றாகவே இருந்துள்ளது. சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினரும், அவர்களின் கைக்கூலியாகச் செயற்படும் தமிழ் இனவிரோதக்கும்பல்களும் எப்பொழுதும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலை விடுப்பவர்களாகவே உள்ளனர்.

இவர்களுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகளும் அனுசரணையாகவே உள்ளது. இதனை எவருமே நிராகரித்துவிட முடியாது. அவ்வாறு இல்லாவிடில் கடந்த நான்கு அண்டுகளுக்கு முன்னர் ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணை இதுவரையில் முற்றுப் பெற்றிருக்கும் குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டிருப்பர். ஆனால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், தண்டனை வழங்கவும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தயாராக இல்லாதபோது தமிழ் ஊடவியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நீங்குவதற்கு வாய்ப்பில்லை.

# புளத்சிங்களவில் தமிழர் மீதான தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒன்றாகும்

### - ம.ம.மு.தலைவர் பி.சந்திரசேகரன் தெரிவிப்பு

களுத்துறை புளத்சிங்கள மில்லகந்த தமிழர்களின் மீதான தாக்குதல் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும் என மலையக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

புளத்சிங்கள பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் தலைமையில் 500 பேருக்கும் மேற்பட்டோர் திரட்டப்பட்டே தமிழர்களின் மீதான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவை யாவும் சிறிலங்கா காவல்துறையினருக்கு தெரியாமல் இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை எனக் கூறியுள்ள பி. சந்திரசேகரன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டை வழங்குவதால் மாத்திரம் இவ்வாறான பிரச்சினை தீர்க் கப்படாது என தெரிவித்துள்ளார். எனவே நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற நிலையில் சனாதிபதி எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை தடுக்க முன்வரவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (32)

# புளத்சிங்களவில் சிங்களவரால் தமிழரின் 200 வீடுகள் சேதம்

களுத்துறை புளத்சிங்கள மில்லகந்த தோட்டத்தில் தற்சமயம் நிலைமை வழமைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. நேற்று முன்தினம் இரவு அங்கு இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சுமார் 200 வீடுகள வரை சேதமாக்கப்பட்டன. சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20பேர் வரை காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இந்த நிலையில் நேற்று மோதலில் ஈடுபட்ட இரண்டு சமூகங்களுக்கும் இடையில் சுமுக நிலையை ஏற்படுத்தும் முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக இன்று புளத்சிங்கள பிரதேச செயலகத்தில் இணக்கக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (32)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிளவு ஏற்பட அனுமதிக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிளவு ஏற்பட ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தாபகர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் அந்தக் கூட்டணியில் பிளவு ஏற்பட நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உல்லாசப்பயணத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த அவர்,

சிறிலங்கா சுதந்திரகட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கருத்துப்பரிமாற்றம் நடத்தப்படுவதற்காக இன்னும் சிலதினங்களுக்குள் விசேட குழுவொன்று நியமிக்கப்படும்.

இந்தக்குழுவில் இரு கட்சியிலும் இருந்து ஐந்து உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். இந்தப் பிரேரணையை விமல்வீரவன்ச ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இதேவேளை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கு ஜே.வி.பி. பணி புரிகின்றது. எனக்கு அந்தக்கட்சியில் பெரும் நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்வதற்கென தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம் கவிழ்க்கப்படுவதையோ அல்லது அது வீழ்ச்சியடைவதையோ அனுமதிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### -சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசனைக்கமைய -

# புண்ணிய கிராம வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பம்

சிறிலங்காவில் கிராமிய மற்றும் ஆன்மீக பொருளாதார மேம்பாட்டை முன்னிட்டு கிராமத்தையும், விகாரையையும் ஒன்றிணைத்து செயற்படுத்தும் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் இன்று ஆரம்பமாகிறது. சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் யோசனைக்கு அமையவே இத்திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

புண்ணிய கிராம வேலைத் திட்டம் பற்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்து தெரிவிக்கையில்; மகிந்த தேரர் உருவாக்கிய கலாசாரத்தின் பலாபலனாகவே இலங்கை மக்களாகிய நாம் பெருமைப்படும் விகாரைகள், தாது கோபுரங்கள்; தூபிகள் என்பன எம் நாட்டில் தோன்றின அது மட்டுமன்றி எமது கல்வி கலை இலக்கியம் ஆகியன இதன் காரணமாகவே வளர்ச்சிகண்டன. சுருங்க கூறினால் மகிந்த தேரர் எமது நாட்டில் ஒரு கலாசார புரட்சியை ஏற்படுத்தி உள்ளார்.

கிராமத்தையும் விகாரையையும் ஒன்றிணைந்ததான இந்த கலாசார முறையை பேணிப்பாது காக்க எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய விகாரைகள் அபிவிருத்தி செய்யப்படும். இதற்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### – புலிகள் கடலில் கொள்கலனை இறக்கினராம் –

# மன்னார் கடலில் கடற்படையினர் சுழியோடிகளின் உதவியுடன் தேடுதல்

மன்னார் கடலில் இன்று கடற்படையினர் சுழியோடிகளை பயன்படுத்தி தேடுதல் நடவடிக்கைகளை நடத்தினர். நேற்று முன்தினம் பேசாலை, விடத்தல்தீவு கடற்பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் கொள்கலன் ஒன்றை கடலில் இறக்கியதாக தகவல் கிடைத்ததன் அடிப்படையிலேயே தாம் தேடுதல்களை நடத்தியதாக கடற்படை யினர் தெரிவித் துள்ளனர். இந்த கொள்கலனில் ஆயுதங்கள் இருந்திருக் குமா? என்பது குறித்து அறிந்து கொள்வதற்காகவே கடற்படையினர் சுழியோடிகளை பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும் இந்த தேடுதல் நடவடிக்கையின் போது எவ்வித தடயங்களும் கிடைக்கவில்லை. (32)

# ஜே.வி.பி.யும் ஹெல உறுமயவும் சமாதானத்திற்கு திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்

### -புண்ணியசார தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் சமாதான முயற்சிகளை எதிர்க்கும் ஜே.வி.பி.யும் சிஹல உறுமயவும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உருப்படியான நல்ல திட்டத்தை மக்கள் முன்வைக்க வேண்டும் என புண்ணிய சாரதேரர் கேட்டுள்ளார்.

நாட்டில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை இவர்கள் எதிர்த்து வருவதால் இதனைநான் அவர்களிடம் வேண்டுகோளாக விடுகிறேன். புலிகளின் தீர்வுத் திட்டத்தைப் புறக்கணிக்கக்கூடாது. அரசியல் யாப்பை மாற்றுவதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையையும், விகிதாசாரத்தேர்தல் முறையையும் மாற்றி அமைக்க வேண்டும் எனவும் புண்ணிய சாரதேரர் பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.


உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடல்களிலும், சமுத்திரங்களிலும் காணப்படும் மாசுக்களில் 80 சதவீத, மாசுக்கள் நிலம் சார்ந்த செயற் பாடுகளினாலேயே உண்டாகின்றன.

# இலங்கையின் சமாதான நடவடிக்கையில் இந்தியா நேரடியாகத் தலையிடாது

(புதுடில்லி)

இலங்கையின் சமாதான நடவடிக்கையில் இந்தியா நேரடியாகத் தலையிடாது. நோர்வேயின் உதவியுடன் வியக்கத்தகு தீர்வு ஏற்படும் என நம்புகிறோம் என இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்றுக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவரைப்பற்றி உச்சநீதிமன்றம் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் அவர் சம்பந்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது. அவரை நாடுகடத்த வேண்டும் என்றுதான் நாங்கள் எப்பொழுதும் கூறிவருகின்றோம்.

தற்போது இலங்கையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப்பின்னணியில் இந்த விடயத்திற்கு நாங்கள் முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகளுக்குத் தடைஏற்படுத்த வேண்டாமென கருதுகின்றோம்.

இலங்கையின் அனைத்துத் தரப்பு மக்களினதும் நியாயமான உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

இதேவேளை இலங்கையின் சமாதான நடவடிக்கையில் இந்தியா நேரடியாகத் தலையிடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேரடித்தலையீடு என்பதை சரியான வார்த்தையாக நான் கருதவில்லை.

இது தொடர்பாக இந்தியா வந்துள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரோடு நான் விரிவாகப் பேசியுள்ளேன.

இந்தியாவின் பங்காளிப்பென அவர் கூறுவது மனிதநேய உதவியை இந்தியா அளிக்குமா என்பதைத்தான் எங்களால் முடிந்ததை நாங்கள் செய்வோம் என உறுதி அளித்துள்ளோம் என்றார்.

## சமாதானப்பேச்சுகள் ஆரம்பித்தாலே இலங்கைக்கு நிதி உதவி கிடைக்கும்

### –உதவி வழங்கும் நாடுகள் நேற்றும் வலியுறுத்து

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதாகவிருந்தால் சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என உதவி வழங்கும் நாடுகள் நேற்றும் வலியுறுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவக்கின்றன.

நேற்று பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸிஸ் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் மீண்டும் இவ்வாறு உறுதியாக வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

## குழந்தை வைத்திய நிபுணர் நாளை கிளி.யில் மருத்துவ சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பொதுவைத்தியசாலையில் கடமையாற்றும் குழந்தை வைத்திய நிபுணர் திருமதி ச.விக்கினராஜா மோகன் அவர்கள் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் குழந்தை நோயாளர்களைப் பார்வையிட உள்ளார். அன்று காலை 07.00 மணி தொடக்கம் சிகிச்சையும் ஆலோசனையும் நடைபெறும் என மாவட்ட வைத்திய அதிகாரி அறியத்தந்துள்ளார்.

## முழுநிலாக்கலையரங்கு பிற்போடப்பட்டது

கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த தமிழீழ நுன்கலைக்கல்லூரியின் முழுநிலாக் கலையரங்கு நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் அவர்களின் அஞ்சலி நிகழ்வையொட்டி பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## ஊடகவியலாளர் நடேசன்...

வர்த்தக நிலையங்கள் என்பனவும் இன்றைய தினம் மூடப்படவுள்ளன.

இதேவேளை சிரேஷ்ட ஊடகவியலாளர் நடேசனின் வித்துடல் இன்று நண்பகலிற்குப் பின்னர் முகமாலையூடாக குடாநாட்டிற்கு எடுத்துவரப்படவுள்ளது.

தென்மராட்சியின் கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, பகுதிகளிலும் ஊர்காவல்துறை பகுதியிலும் அஞ்சலிக்கு வைக்கப்படும் அன்னாரின் வித்துடல் பின்னர் யாழ் நகரப்பகுதியிலும் வலிகாமத்தின் மானிப்பாய், சுன்னாகம், மற்றும் அச்சுவேலிப் பகுதியிலும் அஞ்சலிக்கு வைக்கப்படும் பின்னர் நெல்லியடியிலுள்ள அன்னாரது பிறந்த இடத்திற்கு எடுத்துவரப்பட்டு இறுதிக்கிரியை களின் பின்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அதைத் தொடர்ந்து அஞ்சலிக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.(33,27)

## விடுதலைப்புலிகள்...

சம்பவங்கள் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அருகாமையில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 24.05.2004 அன்று கிழக்குப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவரும், புத்திஜீவியும், சமூக சேவையாளருமான திரு. குமாரவேல் தம்பையா அவர் கள் அவரது இல்லத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் இடம்பெற்று ஏழாம் (7) நாள் கிழக்கிலங்கையின் தலைசிறந்த எழுத்தாளரும், ஊடகவியலாளருமாகிய திரு. ஐயாத்துரை நடேசன் அவர்கள் அலுவலகக் கடமைக்குச் சென்றபோது காலை 9.10 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான எல்லை வீதியில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவ்வாறான பல சம்பவங்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதைப் பலமுறை நாங்கள் உங்களுக்குச் சுட்டிக்காட்டியும், நீங்கள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையென சுட்டிக்காட்டுகின்றோம்.

இச்சம்பவங்கள் விடயமாக நீங்கள் மிகக் கூடிய கவனமெடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் மத்தியில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, சமாதானத்தை முன்னெடுப்பதற்கு பாரிய பங்களிப்பை செய்ய வேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய உங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான

சபை சம்பந்தமாக விரைவில் பேசி இதற்கொரு தீர்க்கமான முடிவு எட்டப்பட்டு இடைக்காலத்திலேனும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான். அதை நாங்கள் இவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம்.

ஏனெனில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இந்த சமாதான முன்னெடுப்புக்களினால் எங்களுடைய மக்கள் எந்தவித நன்மையையும் அடையவில்லை. அவர்கள் நம்பிக்கையீனம் அடைந்துள்ளார்கள். ஆகவே எங்கள் மக்களுடைய விரக்தியையும் நம்பிக்கையீனத்தையும் நாங்கள் நிவர்த்தி செய்வது என்று சொன்னால், விரைவில் இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேசி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அதற்கூடாக சர்வதேச உதவிகளைப் பெற்று எங்களுடைய மக்களது மறுவாழ்வுப் பணிகளில் நாங்கள் பயன்படுத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய எதிர்பாப்பு ஆகும்.

அண்மைக்காலத்தில் இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கிற்கான மீள்கட்டுமானம், அபிவிருத்தி, புனர்வாழ்வு என்று கூறி பல கட்டமைப்புக்களை நிறுவிவருகின்றது. அது ஒரு தலைப்பட்சமானது. அதை ஒருபோதும் எமது மக்களோ, தமிழீழ விடுதலைப்புலிகளோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்கின்ற யதார்த்தத்தை அவர்களுக்கு விளக்கியிருக்கின்றோம்.

ஆகவே சர்வதேச சமூகம் நிதியுதவிகளை இலங்கைக்கு செய்கின்றபொழுது, அது நிச்சயமாக தமிழர் தாயகத்திற்கு பகிரப்படவேண்டும். தமிழர் தாயகத்தில் ஒரு வலுவான கட்டமைப்பு நிறுவப்பட்டு, அந்த மக்களுக்கு சரியான முறையில் கொண்டுசெல்லக்கூடிய தீர்க்கமான நிலைப்பாடு இல்லாமல் சர்வதேச சமூகம் நிதியுதவிகளைச் செய்யுமாக இருந்தால் அது நிச்சயமாக தமிழ் மக்களுக்கு பயனளிக்கப்போவதில்லை என்கின்ற எமது நிலைப்பாட்டை இன்றைக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என்றார்.

இப்பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று பகல் 11.00 மணி முதல் 12.15 வரை இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவனும். உலக வங்கியின் சார்பில் உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர்காரோல்ட் அவரது செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (சோ)

## வவுனியாவில்

பாளர் ஞானவேல் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெருமளவான மக்கள் ஆகியோர் கையேற்று பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திற்கு கொண்டு வந்தனர் பின்னர் வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானவேல் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலிக்கூட்டத்தில் பொதுச்சுடரினை விடுதலைப்புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றினார். மலர் மாலையினை நடேசனின துணைவியார் அணிவித்தார். அஞ்சலி நிகழ்வில் வன்னிப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் ஜினரு சேனரத்துகமகே உட்பட பலரும் உரையாற்றினர். (21)

## ஊடகவியலாளர்

நோக்கோடு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலே அண்மைக்காலமாக நடைபெற்ற நிகழ்வுகள் அதன் காரணமாகவே நடைபெற்றன. அதன்தொடர்ச்சியாகத்தான் படைத்தரப்பினுடைய முழு ஆதரவுடன் இந்தக் கொலை நடந்திருக்கின்றது.

நாங்கள் இதுசம்பந்தமாக நோர்வே தரப்பிற்கும், கண்காணிப்புக்குழுவிற்கும் மிகக் கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கின்றோம்.

ஏனெனில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம் மட்டுமல்ல இராணுவத்தின் கண்காணிப்புக்குட்பட்ட மிகவும் செறிவாக இராணுவ முகாம்கள் அமைந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் தான் இது நடந்திருக்கின்றது.

அண்மை நாட்களாக இராணுவப் புலனாய்வு அமைப்பினர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வைத்துப் பார்க்கின்ற பொழுது இப்படிப்பட்ட கொலைகள் தொடரும் என்கின்ற ஒரு செய்தியை அந்தத் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக மக்கள் மத்தியில் விநியோகித்திருந்தார்கள். இவற்றையெல்லாம் வைத்து பார்க்கின்றபொழுது எங்களால் முழுமையாக ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக தேசத்துரோகி கருணாவையும், அவரோடு கூடிய இன்னும் ஒரு சில துரோகிகளையும் இன்று படைத்தரப்பு பாதுகாத்து வைத்திருக்கின்றது. அது போல ஏனைய ஆயுதக்குழுக்களையும் பாதுகாத்து அங்கே வைத்திருக்கின்றது. அவர்கள் ஆயுதத்தோடு மட்டக்களப்பு நகர்ப்பிரதேசத்தில் நடமாடுவதாக நாங்கள் அறிந்து அது சம்பந்தமாக படைத் தரப்பிற்கும், கண்காணிப்புக் குழுவிற்கும் அறிவுறுத்தியிருக்கின்றோம்.

ஆகவே இவ்வளவு எச்சரிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும் நாங்கள் கொடுத்த நிலையிலும் அங்கே முழு அளவில் பாதுகாப்பு நிலையை ஏற்படுத்தாதது வருத்தத்தை தருகின்றது: வேதனைக்குரியது.

இதைத், தொடர்ந்து பொறுமையாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதை ஒருபோதும் எங்களுடைய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

ஆகவே இதற்கு மிகவிரைவில் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும் அதுதான் எங்களுடைய மக்களுடைய எதிர்பார்ப்பும், ஊடகவியலாளர்களுடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

இப்படியான கொலைகள் நிச்சயமாக தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கும், விடிவிற்கும் தடையாக இருக்கப்போவதில்லை. இதற்குக் காரணமானவர்கள் நிச்சயமாக அந்த விளைவுகளை சந்தித்தேயாவார்கள். ஆகவே எங்களுடைய ஊடகவியலாளர்களுடைய இழப்பு எங்களால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தாலும், நிச்சயமாக ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் துணிவோடு, தமிழ்த் தேசியத்தின் விடிவுக்காக உறுதியோடு குரல் கொடுக்கின்ற நிலை தொடர வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மிகுந்த கரிசனை கொண்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமான நடவடிக்கைகளை மிகவிரைவில் முன்னெடுப்பார்கள்.

எமது தேசியத்தலைவரும் மிகவும் வேதனையடைந்திருக்கின்றார். அவருடைய சார்பாகவும், அவருடைய குடும்பத்தினருக்கும், ஊடகவியலாளர் சமூகத்திற்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும், அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

கிளிநொச்சியில்

ஆங்கிலம் பேச்சு வகுப்பு ஆரம்பம்

காலம் :– 06.06.2004

நேரம் :– பி.ப.5.00மணி

இடம் :– போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு செயலகம் (பாஸ்ஒவ்பிஸ்) அருகில், கனகபுரம், கிளிநொச்சி (பேருந்து நிலையவீதி)

குறிப்பு :– அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். குறைந்த காலப்பகுதியில் ஆங்கிலத்தில் பேச எழுத, வாசிக்க ஏற்படுத்தப்படும்.

ஆசிரியர் :– றஜித் (4565)

## கண்ணீர் அஞ்சலி



திரு. ஐயாத்துரை நடேசன் அவர்கள்

மூத்த பத்திரிகையாளரும் நாட்டுப்பற்றாளருமான திரு. ஐயாத்துரை நடேசன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் நாங்களும் பங்கேற்கின்றோம்.

நிர்வாகப் பணிப்பாளர்,
பணியாளர்கள்,
ஈழநாதம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.